


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 150 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai Volume: 01 Issue: 150 Sunday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(11-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -27
பிறை: தேய்பிறை
திதி
அஷ்டமி நண்பகல் 01.42 வரை
பிறகு நவமி
நட்சத்திரம்:
சித்திரை இரவு 09.33 வரை
பிறகு சுவாதி
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி
சூலம் - மேற்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | பரிசு |
| கடகம் | பாராட்டு |
| சிம்மம் | ஆக்கம் |
| கன்னி | வரவு |
| துலாம் | செலவு |
| விருச்சிகம் | ஊக்கம் |
| தனுசு | புகழ் |
| மகரம் | ஆதாயம் |
| கும்பம் | அமைதி |
| மீனம் | கடமை |


# சென்னையில் இன்று கனமழை! 5 மாவட்டங்களுக்கு இன்று ஆரஞ்சு எச்சரிக்கை!!

**சென்னை,ஜன.11:**

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னையில் இன்று கனமழை பெய்யும் என்றும், இன்று 5 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையையும் சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்தது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கடந்த 5 மணி நேரமாக மணிக்கு 15 கி.மீ. வேகத்தில் இலங்கையை நோக்கி நகர்ந்து வருகிறது. இது சென்னைக்கு 450 கி.மீ. தொலைவில் தென்கிழக்கிலும், காரைக்காலில் இருந்து 250 கி.மீ. தொலைவில் தென்கிழக்கிலும் நிலை கொண்டுள்ளது.

மேற்கு வட மேற்கு திசையில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நகர்ந்து இலங்கை அருகே நேற்று மாலைக்குள் யாழ்ப்பாணம் - திரிகோணமலை இடையே கரையைக் கடக்க வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னையில் இன்று கனமழை பெய்யும் என்றும், இன்று 5 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையையும் சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் 5 மாவட்டங்களில் இன்று ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், 7 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக் கூடும்.

அதுபோல, ராமநாதபுரம், சிவகங்கை, அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு மற்றும் புதுவையில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாளை சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது,சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் புதுச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# உலகில் வேகமாக வளரும் பெரும் பொருளாதாரமாக இந்தியா நீடிக்கும்

## ஐ.நா. அறிக்கையில் தகவல்

**நியூயார்க்,ஜன.11:**

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என்று கணித்துள்ள ஐ.நா., அமெரிக்காவின் வரி விதிப்புக்கு மத்தியிலும் உலக அளவில் வேகமாக வளரும் பெரும் பொருளாதார நாடாக இந்தியா நீடிக்கும் என்று தெரிவித்துள்ளது.

உலகப் பொருளாதார சூழல் மற்றும் வாய்ப்புகள்-2026 என்ற தலைப்பிலான அறிக்கையை ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வியாழக்கிழமை வெளியிட்டது.

அதில், 'கடந்த 2025-இல் 7.4 சதவீதமாக மதிப்பிடப்பட்ட இந்திய பொருளாதார வளர்ச்சி, நடப்பாண்டில் 6.6 சதவீதம் என்ற அளவில் மிதமானதாக இருக்கும். சவாலான உலகளாவிய சூழலுக்கு இடையே வேகமாக வளரும் பெரும் பொருளாதாரமாக இந்தியா நீடிக்கும். மீள்தன்மைமிக்க தனியார் நுகர்வு, வலுவான பொது முதலீடு, சமீபத்திய வரிச் சீர்திருத்தங்கள், குறைவான வட்டி விகிதங்கள் போன்ற காரணிகள், அமெரிக்காவின் வரி விதிப்பு தாக்கத்தை ஈடு செய்ய உதவும். அத்துடன், குறுகிய கால வளர்ச்சியையும் ஆதரிக்கும்.

அதேநேரம், அமெரிக்காவின் தற்போதைய வரி விகிதங்கள் தொடர்ந்து நீடிக்கும்பட்சத்தில், நடப்பாண்டில் இந்திய ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவிக்கும். ஏனெனில், இந்திய ஏற்றுமதியில் 18 சதவீதம் அமெரிக்காவுக்கே செல்கிறது. ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வலுவான தேவைகள் நிலவுவதால், அந்த நாடுகளுக்கான ஏற்றுமதி மூலம் பகுதியளவு தாக்கத்தை இந்தியா குறைக்க வாய்ப்புள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய வளர்ச்சி: அமெரிக்காவின் வரி அதிகரிப்பு நடவடிக்கை, பொருளாதார நிலையற்ற தன்மை, புவி-அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் நடப்பாண்டில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா. கணித்துள்ளது.

கடந்த ஆண்டு உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2.8 சதவீதமாக மதிப்பிடப்பட்ட நிலையில், நடப்பாண்டு சற்று குறைவான வளர்ச்சியே பதிவாகும் என்று ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் தந்திரி கண்டரரு ராஜீவரு கைது

**திருவனந்தபுரம்,ஜன.11:**

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் திருட்டு வழக்கில் தந்திரி கண்டரரு ராஜீவரு கைது செய்யப்பட்டு உள்ளார்.



கேரளாவில் உள்ள சபரி மலை ஐயப்பன் கோயில் கருவறையின் கதவுகள் மற்றும் பீடத்துடன்கூடிய 2 துவாரபாலகர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசப்பட்டது. அதன் பிறகு 4.5 கிலோ தங்கம் மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக கேரள உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதன் தொடர்ச்சியாக சபரிமலை ஐயப்பன் கோயில் தந்திரி கண்டரரு ராஜீவரு நேற்று கைது செய்யப்பட்டார். இதுகுறித்து சிறப்பு புலனாய்வு பிரிவு போலீஸார் கூறும்போது, "முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் நம்பூதிரியை, தேவசம் போர்டிடம் தந்திரி கண்டரரு ராஜீவரு அறிமுகம் செய்திருக்கிறார். அவரது அறிவுரைப்படியே துவார பாலகர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசும் பணி உன்னிகிருஷ்ணனிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக ராஜீவருவிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. தங்கம் திருட்டு வழக்கில் அவருக்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதால் அவரை கைது செய்துள்ளோம்" என்று தெரிவித்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் திருட்டு தொடர்பாக அமலாக்கத் துறை தனியாக வழக்குப் பதிவு செய்து விசா ரணை நடத்தி வருகிறது. இது தொடர்பாக இதுவரை 15 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அமலாக்கத் துறை வட்டாரங்கள் கூறும்போது, "தங்கம் திருட்டு வழக்கில் கேரள போலீஸார் 11 பேரை கைது செய்துள்ளனர். நீதிமன்ற அனுமதியுடன் அவர்களை எங்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்துவோம்" என்று தெரிவித்தன.

# பாஜகவின் இரட்டை என்ஜின் அரசுகளால் மக்களின் வாழ்க்கை சீரழிவு: ராகுல் காந்தி கடும் விமர்சனம்

**புதுடில்லி,ஜன.11:**

பாஜகவை 'ஊழல் ஜனதா கட்சி' என்று விமர்சித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அக்கட்சியின் 'இரட்டை என்ஜின்' அரசுகளின் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தால் மக்களின் வாழ்க்கை சீரழிவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது 'எக்ஸ்' சமூக ஊடகப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: நாடெங்கிலும் உள்ள பாஜகவின் 'இரட்டை என்ஜின்' அரசுகள், மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்துவிட்டன. ஊழலும், அதிகார மமதையும் பாஜக அரசியலில் மேலிருந்து கீழ் வரை நஞ்சாகப் பரவியுள்ளது.

ஏழைகள், தொழிலாளர்கள் மற்றும் நடுத்தர மக்களின் உயிர்கள், இவர்களின் ஆட்சியில் வெறும் புள்ளிவிவரங்களாக மட்டுமே பார்க்கப்படுகின்றன. 'வளர்ச்சி' என்ற பெயரில் இங்கே பகல்கொள்ளை அரங்கேறி வருகிறது.

குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு?...: உத்தரகண்ட் மாநிலத்தில் 19 வயது இளம்பெண் அங்கிதா பண்டாரி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த தேசத்தையே உலுக்கியது. ஆனால், அந்த வழக்கில் ஆளுங்கட்சியால் பாதுகாக்கப்படும் முக்கியப் பிரமுகர் யார்? சட்டம் எப்போது அனைவருக்கும் சமமாகும்?

அதேபோல், உத்தர பிரதேசத்தின் உன்னாவ் வழக்கில் அதிகார மமதையால் குற்றவாளிகள் எப்படி காப்பாற்றப்பட்டார்கள் என்பதையும், நீதிக்காக பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பெரிய விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் இந்த நாடே பார்த்தது.

நிர்வாகச் சீர்கேடும், ஊழலும்...: மத்திய பிரதேசத்தின் இந்தூரில் அசுத்தமான குடிநீரால் உயிரிழப்புகள் நேரிட்டன. குஜராத், ஹரியாணா, தில்லி ஆகிய மாநிலங்களிலும் குடிநீர் மாசுபட்டுள்ளதால் மக்கள் நோய்த்தொற்று அச்சத்தில் உள்ளனர்.

ராஜஸ்தானின் ஆரவல்லி மலைத்தொடர் முதல் அனைத்து இயற்கை வளங்களும் பெரும் செல்வந்தர்களின் லாபத்துக்காகச் சூறையாடப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் மக்களுக்கு மாசு மற்றும் பேரிடர்களே மிஞ்சுகின்றன.

அரசு மருத்துவமனைகளில் எலிகள் கடித்ததில் பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பது, தரமற்ற மருந்துகள், அரசுப் பள்ளிக் கட்டடங்கள் இடிந்து விழுவது போன்றவை வெறும் அலட்சியம் அல்ல; அவை ஊழலின் நேரடி விளைவுகள்.

பாலங்கள் இடிந்து விழுவதும், ரயில் விபத்துகளில் குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக உயிரிழப்பதும் தொடர்கதையாகிவிட்டன. இத்தகைய நேரங்களில் பாஜக அரசு வெறும் புகைப்படங்கள் எடுப்பதையும், 'ட்வீட்' செய்வதையும், பெயரளவுக்கு இழப்பீடு வழங்குவதையும் மட்டுமே வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

அழிவின் வேகம்...: பிரதமர் மோடியின் 'இரட்டை என்ஜின்' பெரும் செல்வந்தர்களுக்காக மட்டுமே இயங்குகிறது. சாமானிய இந்தியரைப் பொருத்தவரை, இந்த ஊழல் என்ஜின்கள் வளர்ச்சியின் வேகம் அல்ல; அவை அழிவின் வேகம். ஒவ்வொரு நாளும் ஒருவரின் கையை இந்த அரசு நசுக்கிக் கொண்டிருக்கிறது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி தளமாக உருவெடுக்கும் சீனா!

**புதுடில்லி,ஜன.11:**

இந்தியாவில் இருந்து சீனாவுக்கான ஏற்றுமதி கடந்த 2022-23-ஆம் நிதியாண்டு ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில் 10.28 பில்லியன் டாலராக இருந்தது. இது 2024-25-ஆம் நிதியாண்டில் 9.2 பில்லியன் டாலராக சரிந்த நிலையில், இது நிகழாண்டு ஏப்ரல்-நவம்பர் காலகட்டத்தில் 33 சதவீதம் அதிகரித்து 12.22 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் சீனாவுக்கு இந்த அளவு ஏற்றுமதி அதிகரித்துள்ளது இதுவே முதல்முறை. எண்ணெய் உணவுகள், கடல்சார் பொருள்கள், தொலைத்தொடர்பு கருவிகள், மசாலா பொருள்களின் ஏற்றுமதியே இந்த அதிகரிப்புக்குக் காரணம். இந்தியா-சீனா இருதரப்பு வாத்தக உறவில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றத்தை இந்தத் தரவுகள் எடுத்துரைக்கின்றன.

இந்திய ஏற்றுமதி குறித்து தொழில் துறையைச் சேர்ந்த ஏற்றுமதியாளர் ஒருவர் கூறுகையில், 'அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருள்களுக்கு அந்நாட்டு அரசு அதிக வரி விதித்துள்ளது. இது அந்நாட்டுக்குப் போட்டி விலையில் பொருள்களை ஏற்றுமதி செய்வதை இந்தியாவுக்கு சிக்கலாக்கியுள்ளது என்று தெரிவித்தார்.

# விஜய் பிரசாரத்திற்கு பயன்படுத்தும் பேருந்தில் சிபிஐ அதிகாரிகள் சோதனை

**சென்னை,ஜன.11:**

கடந்த செப். 27ம் தேதி கரூரில் விஜய் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர். இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இதற்கு முன்பாக, கடந்த நவ.25-ம் தேதி தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார் ஆகியோர் புதுடெல்லியில் சிபிஐ விசாரணைக்கு ஆஜராகினர். இவர்களோடு, தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் கே.பி. மதியழகன், எம்.சி. பவுன்ராஜ் ஆகியோரும் சிபிஐ விசாரணைக்கு ஆஜராகினர். சிபிஐ அதிகாரிகளின் பல்வேறு கேள்விகளுக்கு இவர்கள் பதில் அளித்தனர்.

டிச.4-ம் தேதி கரூர் மாவட்ட ஆட்சியர் தங்கவேலும் சிபிஐ அதிகாரிகள் முன் ஆஜராகி அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.


அவரிடம் அப்போது இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இந்த வழக்கில் விசாரணைக்கு நேரில் ஆஜராக விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது. அதில், ஜனவரி 12-ம் தேதி டெல்லியில் உள்ள சிபிஐ தலைமையகத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விஜய் பிரசார வாகனத்தை சிபிஐ அதிகாரிகள் இன்று பறிமுதல் செய்துள்ளனர். பனையூரில் இருந்து கரூர் எடுத்து சென்ற சிபிஐ அதிகாரிகள், பேருந்தில் சோதனை செய்து வருகிறார்கள்.

விஜய் பிரசார வாகனத்தின் டிரைவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# ஐஇடி தரவு மேலாண்மை தளம்: அமித் ஷா தொடங்கி வைத்தார்

**குருகிராம்,ஜன.11:**



ஹரியானாவின் குருகிராம் மாவட்டம் மானேசரில் உள்ள தேசிய பாதுகாப்பு படை (என்எஸ்ஜி) முகாமில் தேசிய ஐஇடி தரவு மேலாண்மை அமைப்பு (என்ஐடிஎம்எஸ்) அமைக்கப்பட்டுள்ளது.

இது, தீவிரவாதத்துக்கு எதிரான அடுத்த தலைமுறை பாதுகாப்பு கேடயமாகவும் நாட்டில் நடைபெறும் அனைத்து வகை குண்டுவெடிப்புகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கையாகவும் செயல்படும் என கூறப்படுகிறது. இது, அனைத்து வகை குண்டுவெடிப்புகளையும் துல்லியமாக ஆய்வு செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் நவீன சாதனங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் என்ஐடிஎம்எஸ் தளத்தை அமைச்சர் அமித் ஷா நேற்று காணொலி மூலம் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், "இந்த என்ஐடிஎம்எஸ் காவல் துறை, புலனாய்வு முகமைகள், மாநில தீவிரவாத எதிர்ப்புப் படைகள், என்ஐஏ போன்ற மத்தியப்படைகளுக்கு குண்டுவெடிப்புகளின் செயல்பாட்டு முறைகளை பகுப்பாய்வு செய்ய விரிவான தரவுகளை வழங்கும்" என்றார்.

# போக்சோ சட்டத்தில் திருத்தம் வேண்டும்: மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு பரிந்துரை

**புதுடெல்லி,ஜன.11:**

உத்தரபிரதேசத்தில் போக்சோ வழக்கில் சிக்கிய நபர் ஒருவருக்கு அலகாபாத் ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கியதுடன், பாதிக்கப்பட்டவருக்கு வயது நிர்ணய சோதனை நடத்தவும் உத்தரவிட்டு இருந்தது. இதை எதிர்த்து மாநில அரசு தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் சஞ்சய் கரோல், கோடீஸ்வர் சிங் அமர்வு விசாரித்தது.

அப்போது போக்சோ சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரைத்து உத்தரவிட்டது. நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறுகையில், 'போக்சோ சட்டத்தை தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து மீண்டும் மீண்டும் நீதித்துறை வெளியிட்டுள்ள அறிவுரைகளை கருத்தில் கொண்டு, இந்தத் தீர்ப்பின் நகலை மத்திய சட்டச் செயலாளருக்கு அனுப்பி, இந்த அச்சுறுத்தலைத் தடுக்க சாத்தியமான நடவடிக்கைகளைத் தொடங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்.

இதில் முக்கியமாக, உண்மையான இளம் பருவ உறவுகளை பாதுகாக்கும் வகையில், போக்சோ சட்டத்தில் ரோமியோ-ஜூலியட் பிரிவை அறிமுகப்படுத்த வேண்டும். மேலும் இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி, பகைமைகளைத் தீர்த்துக்கொள்ள முயல்பவர்கள் மீது வழக்குத் தொடர உதவும் வழிமுறையை ஏற்படுத்த வேண்டும்' என்று தெரிவித்தனர்.

# உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கான அரசாணை வெளியீடு

**சென்னை, ஜன.11:**

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் தொடர்ந்த வலியுறுத்தி வந்தன. இந்த நிலையில் தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் (உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்) மீண்டும் அமல்படுத்தப்படும் என கடந்த 3-ந்தேதி அறிவித்தார்.

இந்த நிலையில் ஜனவரி 1-ந்தேதி முதல் இந்த திட்டம் அமல்படுத்தப்படும் என அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.



உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் திட்டத்தின்படி, கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக அளிக்கப்படும். 50 சதவீதத்தில் 10 சதவீதம் ஊழியர்களின் பங்களிப்பாக இருக்கும். அரசு ஊழியர்களுக்கு இணையாக அகவிலைப்படி உயர்வும் அளிக்கப்படும். ஓய்வூதியதாரர் இறந்தால் அவர் பெற்ற ஓய்வூதியத்தில் 60% குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

50% உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு 6 மாதத்திற்கு ஒருமுறை அகவிலைப்படி உயர்வு தரப்படும். பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் ஓய்வு பெற்றாலும் குறைந்தபட்ச ஓய்வூதியம் அளிக்கப்படும். ஓய்வு பெறும்போதும் பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும் பணிக்காலத்திற்கேற்ப ரூ.25 லட்சம் பணிக்கொடை வழங்கப்படும்.

# அரசு டாக்டர்கள் 20-ந்தேதி போராட்டத்தில் குதிக்க முடிவு

**சென்னை, ஜன.11:**

அனைத்து அரசு டாக்டர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (போக்டா) சார்பாக தொடர் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.



அரசு டாக்டர்களின் நீண்ட நாள் கோரிக்கையான 354 அரசாணையை மறுவரையறை செய்ய வேண்டும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படி ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி இந்த போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து அரசு ஜனநாயக டாக்டர்கள் சங்கங்க ளின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பி பாலகிருஷ்ணன் கூறியதாவது:-

நீண்ட காலமாக நாங்கள் முன் வைத்துள்ள கோரிக்கயை அரசு இதுவரை பரிசீலிக்கவில்லை. இந்த நிலையில் மீண்டும் சுகாதாரத்துறை அமைச்சரை சந்தித்து வலியுறுத்தினோம். அவர் 19-ந்தேதி இதுகுறித்து நிதித்துறை செயலாளர் இடம் பேசி முடிவு அறிவிப்பதாக கூறியுள்ளார்.

19-ந்தேதிஎங்களதுகோரிக்கை பரிசீலிக்கப்படாவிட்டால் 20-ந்தேதி முதல் தொடர் போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளோம்.

முதல் கட்டமாக 48 மணிநேரம் உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ளப்படும், பின்னர் புறநோயாளிகள் புறக்கணிப்பு போராட்டம், அதனைத் தொடர்ந்து சாகும் வரை போராட்டம், காலவரையற்ற வேலை நிறுத்தம் என பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்த செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் நலன் பாதிக்காத வகையில் அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

பொங்கலுக்குள் எங்களுக்கு தீர்வு கிடைக்குமா? என்று பார்ப்போம். ஆனால் பொங்கல் முடிந்த பிறகு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் மீண்டும் டபுள் டக்கர் பஸ் சேவை




**சென்னை, ஜன.11:**

தமிழகத்தில் இரண்டு அடுக்கு (டபுள் டக்கர்) பஸ் சேவை கடந்த 1970 ஆண்டு முதல் இருந்து வந்தது. இந்த சேவை 2007 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. 18 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்த சேவையை கொண்டு வர தமிழக அரசு ஆர்வம் காட்டியுள்ளது.

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து இதற்கான பணிகள் நடந்து வந்தன. அதன் முதல் கட்டமாக அசோக் லேலண்ட் நிறுவனத்திடம் இருந்து 20 பஸ்களை வாங்க திட்டமிட்டு அதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழக சுற்றுலாப் பயணிகள் சென்னையின் அழகை கண்டு ரசிக்கவும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதமாக முக்கிய சுற்றுலாத்தலங்களுக்கு டபுள் டக்கர் பஸ் சேவையை தொடங்க சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது.

அதன்படி அமெரிக்க வாழ் தமிழர்கள் நிதி பங்களிப்புடன் முதல் கட்டமாக குளிர்சாதன வசதி கொண்ட ஒரு மின்சார டபுள் டக்கர் பஸ்ஸை அசோக் லேலண்ட் நிறுவனத்திலிருந்து சுற்றுலாத்துறை வாங்கியுள்ளது. சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்த பஸ்ஸின் இரு பக்கவாட்டிலும் தஞ்சை பெரிய கோவில், கலங்கரை விளக்கம், ரிப்பன் கட்டிடம், ஜல்லிக்கட்டு காளை அடக்கும் வீரன் உள்ளிட்ட புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன. அதில் மிகப்பெரிய அளவில் தமிழ் வாழ்க என எழுத்துக்களும் இடம்பெற்றுள்ளது.

இந்த டபுள் டக்கர் பஸ் சோதனை ஓட்டம் நடந்து முடிந்துள்ளது. இந்த நிலையில் புதிய சேவையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 12-ந்தேதி தொடங்கி வைக்கிறார். அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை இந்த டபுள் டக்கர் பஸ் இயக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் மீண்டும் டபுள் டக்கர் பஸ் சேவை தொடங்க இருப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் பயணிகள் ஓய்வு அறை, தங்குமிடம் நவீனமாகிறது

**சென்னை, ஜன.11:**

பயணிகளின் வசதியை மேம்படுத்தும் மற்றும் ரெயில் நிலைய வசதிகளை அதிகரிக்கும் தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் 'உள்ள ஓய்வு அறைகள் மற்றும் தங்கும் கூடங்களை 'புதுப்பித்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல்' முறையின் கீழ் மேம்படுத்த தெற்கு ரெயில்வேயின் சென்னை கோட்டம் முடிவு செய்துள்ளது.



முன்பு ரெயில்வே நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த இந்த ஓய்வு அறைகள் மற்றும் தங்கும் கூடங்கள், தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்ப பயணிகளுக்கு மிகச்சிறந்த மற்றும் இனிமையான தங்கும் அனுபவத்தை வழங்கும் வகையில் நவீனப்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ், தற்போதுள்ள 9 குளிர்சாதன வசதியுள்ள படுக்கையறைகள் ஆண்களுக்கான தங்கும் கூடத்தில் உள்ள 23 குளிர் சாதன படுக்கைகள், பெண்களுக்கான தங்கும் கூடத்தில் உள்ள 5 படுக்கைகள் மற்றும் பயன்படுத்தப்படாத காலி இடங்கள் ஆகியவை முழுமையாக சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

நாட்டின் மிகவும் பரபரப்பான ரெயில்நிலையங்களில் ஒன்றான இங்கு, நவீன வசதிகள் மற்றும் சிறந்த சூழலை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை சென்ட்ரல் ரெயில்நிலையத்தின் கான் கோர்ஸ் பகுதியில் அமைந்துள்ளதால், பயணிகள் இங்கிருந்து நடைமேடைகள், வணிக நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை எளிதாக அணுக முடியும். இது அவர்கள் தங்கும் நேரத்தில் கூடுதல் வசதியை அளிக்கும்.

வர்த்தகம், சுற்றுலா, மருத்துவம், ஆன்மீகம் மற்றும் மாறுதல் பயணங்களுக்காக தினமும் ஏராளமான பயணிகள் சென்ட்ரலுக்கு வருகின்றனர். மேம்படுத்தப்படவுள்ள இந்த வசதிகள், தரமான குறுகிய கால தங்கும் இடங்களுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய உதவும்.

இதற்காக, தகுதியும் அனுபவமும் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து மின்னணு ஏலம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஓய்வு அறைகள் மற்றும் தங்கும் கூடங்களை புதுப்பித்து, இயக்கி, பராமரிப்பதற்கான ஒப்பந்த காலம் 5 ஆண்டுகள் ஆகும். செயல்பாடு திருப்திகரமாக இருப்பின், இது மேலும் 2 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.


பயணிகளுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் இனிமையான அனுபவத்தை உறுதி செய்வதிலும், உள்கட்டமைப்பை தொழில் முறையில் பராமரிப்பதிலும் சென்னை கோட்டம் கொண்டுள்ள தொடர் அக்கறையை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது.

# தகுதியானவர்கள் இருந்தும் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் இருப்பது தான் கல்வியை வளர்க்கும் லட்சணமா?- அன்புமணி

**சென்னை, ஜன.11:**

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1100-க்கும் மேற்பட்ட தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. தகுதியான ஆசிரியர்கள் இருந்தும் தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப 5 ஆண்டுகளாக எந்த நடவடிக்கைகளையும் திமுக அரசு எடுக்காதது கண்டிக்கத்தக்கது.



அரசு பள்ளிகளின் செயல்பாடுகளுக்கு ஆதாரம் தலைமை ஆசிரியர்கள் தான். அதிலும் குறிப்பாக உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மிகவும் முக்கியமானவை. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கான உத்திகளை தலைமை ஆசிரியர்கள் தான் வகுத்து செயல்படுத்த வேண்டும்.

ஆனால், இவ்வளவு முக்கியமான தலைமை ஆசிரியர் பணியிடங்கள் 300-க்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகளிலும், 800-க்கும் மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளிலும் காலியாக உள்ளன.

இந்த பணியிடங்களை ஒற்றை அரசாணை மூலம் நிரப்ப முடியும். அதற்கு தகுதியான ஆசிரியர்கள் ஏராளமானோர் உள்ளனர். ஆனால், ஆசிரியர்களின் பதவி உயர்வு தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் அனைத்திலும் ஏதோ ஒரு வகையில் தமிழக அரசு சம்பந்தப்பட்டுள்ளது.

திமுக அரசு நினைத்திருந்தால் இந்த வழக்குகளை முடிவுக்கு கொண்டு வந்து தலைமை ஆசிரியர் பணியிடங்களை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால், ஐந்தாண்டுகளாக இதற்காக துரும்பைக் கூட அசைக்கவில்லை. அதனால் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை வீழ்ச்சி உள்ளிட்ட ஏராளமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அரசு பள்ளிகளின் சீரழிவுக்கு தலைமை ஆசிரியர்கள் இல்லாததும் முக்கியக் காரணம் ஆகும்.

தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாதது உள்ளிட்ட பல வழிகளில் அரசு பள்ளிகளை சீரழித்த திமுக அரசு, கல்வியில் சிறந்த தமிழ்நாடு என கொண்டாட்டங்களை நடத்துவது கொடூரமானது ஆகும். தமிழ்நாட்டின் வரலாற்றில் கல்வித்துறை மிக மோசமான சீரழிவை சந்தித்தது கடந்த ஐந்தாண்டுகளில் தான். இதற்கான தண்டனையை வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் வழங்குவார்கள் என்று கூறியுள்ளார்.

# வருகிற சட்டமன்றத் தேர்தலில் திராவிடத்துக்கு எதிராக மாற்றத்தை ஏற்படுத்துவோம்- சீமான்

**சென்னை, ஜன.11:**

சென்னை வளசரவாக்கத்தில் உள்ள நாம் தமிழர் கட்சி அலுவலகத்தில் நேற்று பொங்கல் விழா கொண்டாடப் பட்டது.



இந்த விழாவில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் கலந்து கொண் டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

உலகத் தமிழர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பொங்கலுக்கு இதுவரை இல்லாத வகையில் தமிழக அரசு ரூ.3 ஆயிரம் அறிவித்திருக்கிறது.

இதன் மூலம் இந்த பொங்கல் மக்கள் பொங்கலாக இல்லாமல் அரசியல் பொங்கலாக மாறி இருக்கிறது. மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி கொடுப்பதுதான் மக்கள் அரசியலாகும்.

சட்டமன்ற தேர்தலில் பணபலத்துடன் இருப்பவர்கள் ஒரு பக்கமும் மக்கள் பலம் உள்ளவர்கள் இன்னொரு பக்கமும் இருக்கிறார்கள். நாங்கள் மக்கள் பலத்தோடு தனித்து களம் காண இருக்கிறோம்.

இந்த தேர்தலில் நிச்சயம் நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்து வோம்.

ஜனநாயகன் படத்தை போன்று இதற்கு முன்னர் எனது படங்கள் உட்பட பல படங்களுக்கும் தணிக்கை சான்றிதழ் வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. எனவே அதனைப் பற்றி இப்போது பெரிதாக பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

அதைவிட முக்கிய பிரச்சனை கள் பல உள்ளன அதையெல்லாம் பற்றி யாரும் பேசுவதில்லை. ஆசிரியர்கள் போராட்டம், நர்சுகள் போராட்டம் என தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் முதலமைச்சர் ஜனநாயகன் பட விவகாரத்தில் பா.ஜ.க. அரசு மீது குற்றம் சாட்டி இருக்கிறார்.

பொங்கலுக்கு ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டிருப்பதன் மூலம் ரூ. 6,800 கோடியை செலவிட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே ரூ.10 லட்சம் கோடி கடன் இருக்கும் நிலையில் 4½ ஆண்டுகளில் 4 லட்சம் கோடியையும் கடன் வாங்கி இருக்கிறார்கள். இதன் மூலம் தமிழக அரசின் கடன் சுமை மேலும் அதிகரிக்கவே வாய்ப்பு உள்ளது.

இந்த தேர்தல் திராவிடருக்கும் தமிழருக்கும் ஆன தேர்தலாக இருக்கும். திராவிடத்தை வீழ்த்தி பொங்கல் வைப்பதே எங்கள் முதல் வேலையாக இருக்கும். சட்டமன்றத் தேர்தலில் அதனை நிச்சயம் செய்து காட்டுவோம் என்றார்.

# 'ஜன நாயகன்' பட விவகாரம்- திரைப்படத் தணிக்கை வாரியம் அரசியல் கருவியாக செயல்படுவதா?- சிபிஐ

**சென்னை, ஜன.11:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,




திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் கேவிஎன் புரோடெக்சன் நிகழ்கால அரசியல் போக்குகளை எதிரொலிக்கும் "ஜனநாயகன்" என்ற பெயரில் திரைப்படம் தயாரித்துள்ளது. ஜனவரி 9 ஆம் தேதி வெளியிட தேதி நிர்ணயிக்கப்பட்ட, இந்தத் திரைப்படம் கடந்த 2025 டிசம்பர் 15 தேதி தணிக்கை வாரியத்தின் ஒப்புதலுக்காக வழங்கப்பட்டுள்ளது.

தணிக்கை வாரியத்தின் மூலம் 16 பேர் படம் பார்த்து, பரிசீலித்ததன் அடிப்படையில் 25க்கும் மேற்பட்ட திருத்தங்கள் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டு, படத்தை 16 வயதுக்கும் மேற்பட்டவர்கள் மட்டுமே பார்க்கலாம் என சான்று வழங்க முடிவு செய்துள்ளது.

தணிக்கை க்குழுவின் முடிவை எதிர்த்து, படத்தயாரிப்பாளர்கள் மீண்டும் சென்னை உயர்நீதி மன்றத்தை நாடியுள்ளனர். சென்னை உயர்நீதி மன்றம் இது தொடர்பான விசாரணை நடத்தி வருகிறது.

ஜனநாயகன் திரைப்படத்தின் தணிக்கை சான்று வழங்கும் முறையில் அரசியல் தலையீடுகளும், விளையாட்டும் வெளிப்பட்டு வருவதை மக்கள் எளிதில் உணர முடியும்.

கலைத்துறையில் கருத்துக் களை அச்சமின்றி முன் வைக்கும் ஜனநாயக பண்புகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, ஜனநாயகன் திரைப்படத்தை விரைந்து வெளியிட அனுமதிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, திரைப்படத் தணிக்கைக் குழுவை வலிறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

# பராசக்தி படம் திமுக வரலாற்றுக்கு இட்ட வெற்றித் திலகம் - கமல்ஹாசன்

**சென்னை, ஜன.11:**

பராசக்தி படத்தை பாராட்டி நடிகரும் மாநிலங்களவை எம்.பியுமான கமல்ஹாசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அந்த அறிக்கையில், "அன்புள்ள இளவல் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, பராசக்தி படத்தைப் பார்க்கத் தொடங்கும் முன் நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை இந்தப் படம் நம் கூட்டணி எதிர்கொள்ளப்போகும் தேர்தலின் மாபெரும் முரசொலியாகப் போகிறது என்று ஆம், இந்தப் படம் வெற்றி பெற்றாக வேண்டும் என்பது என் ஆசை மட்டுமல்ல, என் உண்மையான வாழ்த்தும் கூட இந்தப் படம் திமுக வரலாற்றுக்கு இட்ட வெற்றித் திலகம்

பின்குறிப்பு:

பின்னால் வந்தாலும் முந்திச் சொல்ல வேண்டியது உணர்ச்சி முந்திக்கொண்டதால் பின்தங்கிய குறிப்பு இது. முதல் பாராட்டு இந்த பயோஃபிக்ஷன் கதையையும், இதன் இயக்குனர் திருமதி சுதா கொங்கராவையும், இக்கதையைத் தேர்ந்து இதற்காக உழைத்து வெற்றியும் காணப்போகும் தம்பி சிவகார்த்திகேயனையும் சேரும்.

இந்தச் சினிமாச் சரித்திரத்தில் இணைந்துவிட்ட ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா உள்ளிட்ட அனைத்து நடிகர்களுக்கும். ஒளிப்பதிவாளர் ரவி கே. சந்திரன், இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ், எடிட்டர் சதீஷ் சூரியா உள்ளிட்ட தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் மற்றும் இந்தப் படத்துக்காக உழைத்த அனைவருக்கும் என் உளமார்ந்த பாராட்டுகள்" என்று தெரிவித்துள்ளார்.

# சட்டமன்ற தேர்தலுக்கு பிரேமலதா அதிரடி வியூகம்

**சென்னை, ஜன.11:**

தமிழகத்தில் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை சந்திப்பதற்கு அனைத்து கட்சிகளும் தீவிரமாக தயாராகி வருகின்றன.



வருகிற சட்டமன்ற தேர்தலில் எந்தெந்த கட்சிகள் ஏற்கனவே உள்ள கூட்டணியில் நீடிக்க போகிறது? என்பது இன்னும் முடிவாகாத நிலையில் நாங்கள் மட்டும் எதற்காக அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டும் என்று அந்த கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் எங்களது ஆதரவை பெற்றுவிட்டு ஏமாற்றி விடுகிறார்கள். எனவே வருகிற தேர்தலில் அதற்கெல்லாம் இடம் கொடுக்காத அளவுக்கு முடிவெடுக்க வேண்டும் என்பதே தே.மு.தி.க.வினரின் எண்ணமாக உள்ளது.

எனவே மேல்சபை எம்.பி. பதவியுடன் இரட்டை இலக்கத்தில் சட்டமன்ற தொகுதிகளை ஒதுக்கும் கட்சியோடு கூட்டணி அமைக்கலாம் என்பதே அந்த கட்சியினரின் விருப்பமாக உள்ளது. இதனையே தே.மு.தி.க. சார்பில் நிபந்தனையாக வைத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தே.மு.தி.க. அலுவலகத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ரகசிய வாக்கெடுப்பில் பெரும்பாலான மாவட்ட செயலாளர்கள் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று வாக்களித்திருப்பதாக கூறப்படுகிறது.

அதே நேரத்தில் அ.தி.மு.க. கூட்டணியை முறிக்க வேண்டாம் என்றும் பலர் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. விஜய் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு ஒரு சில மாவட்ட செயலாளர்களே வாக்களித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

எல்லாம் கருத்தில் வைத்தே தே.மு.தி.க. கூட்டணி தொடர்பாக காய் நகர்த்தி வருகிறது, இதற்கிடையே தே.மு.தி.க.வை அ.தி.மு.க. கூட்டணியில் எப்படியாவது தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் எடப்பாடி பழனிசாமி உறுதியாக உள்ளார். இதையடுத்து விரைவில் தே.மு.தி.க. நிர்வாகிகளுடன் அ.தி.மு.க. தலைமை பேச்சு நடத்தும் என்றும் கூறப்படுகிறது. அதே நேரத்தில் தே.மு.தி.க.வை தி.மு.க. கூட்டணியில் சேர்ப்பதற்கான வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

தி.மு.க. தரப்பிலும் மேல்சபை எம்.பி. பதவி தருவதாக உறுதியளித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே தே.மு.தி.க.- அ.தி.மு.க. கூட்டணியில் சேருவதா இல்லை தி.மு.க. அணியில் இணைவதா என்கிற குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தை பிறந்த பிறகு கூட்டணி தொடர்பான அதிரடி அறிவிப்பை பிரேமலதா வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


FLAT FOR SALE
PONMAR
STONE & ACRES
FLORA
2 BHK
INDEPENDENT
FLOOR - 1033 Sq.ft
99401 55588


NEWLY
CONSTRUCTED
A GRADE
INDUSTRIAL
WAREHOUSE
available on
Lease at TADA,
Near Sri City, A.P
Approx 1.15 lakh Sq.ft.
Ample parking place for lorries and cars
Warehouse on main NH5 express high way having direct approach on high road
Close vicinity to 3 ports and Sri City
Construction as per "A" Grade warehouse norms
98402 97142


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER
NOW
CALENDAR
MANJALMART.COM
RS.100
9337501889
7789941009


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


உடனடி விற்பனை
திருவள்ளூர் அடுத்த மணவாளநகர்
தேசிய நெடுஞ்சாலை
மெயின் ரோட்டில்
26,0000 Sq.ft
(காம்பவுண்ட் உள்ளது)
6000 Sq.ft பில்டிங்
DTCP APPROVED
98400 24841


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.


RG
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..



S.R
Call Drivers
Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

# கவிதை அரங்கம்!





எல்லாம் தவறாக
நடந்தாலும்
சரியாமல் நில்லுங்கள்
எல்லாவற்றையும் சரியாக்க


ஒரு விஷயத்தை உன்னால்
கனவு காண முடியுமானால்
அதனை உன்னால் செய்து
முடிக்கவும் முடியும்

விருப்பத்தோடு
செய்யப்படும்

எல்லா செயல்களும் ஒரு
நாள் நீங்கள் விரும்பும்
உயரத்திற்கு நிச்சயம்
அழைத்து செல்லும்

முயற்சியின் பாதங்களை
வணங்கியே தீரும்
வெற்றியின் சிரம்

## வாழ்க்கை தத்துவம்...



ஆடுகிற ஆட்டமும்
ஒடுகிற ஓட்ட மும்
ஒரு நாள் ஓயும் போது
கூடுகிற கூட்டம்தான்
சொல்லும் நீ யாரென்பதை

மற்றவர்களின் தவறுகளை
திருத்தும் முன் ஒரு முறை
கண்ணாடியை
பார்த்துக்கொள்வது நல்லது

ரசிப்பவை
அனைத்தும் அழகல்ல
பார்க்கும் பார்வையிலும்
மனதில் எழும்
எண்ணங்களில்
மட்டுமே உள்ளது

# கடிதம் செய்த மாற்றம்

பாரதி மக்கள் நல மன்றத்தின் சார்பில் ஆண்டுதோறும், பொங்கல் விழா நாளில் மிகவும் முக்கிய பிரமுகரை அழைத்து அவரை கௌரவித்து பாராட்டி விழா எடுப்பது வழக்கமாக இருந்தது.

அதேபோல இந்த ஆண்டும் ஆன்மீக செம்மல், கொடை வள்ளல், தொழிலதிபர் பரந்தாமன் அவர்களை பாராட்டுவதென பாரதி மக்கள் நல மன்றத்தின் செயற்குழு முடிவு செய்திருந்தது.

அதன்படி விழா ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. விழா நடக்கும் மேடையே சினிமா செட் போன்று வண்ண விளக்குகளால் ஜொலித்துக் கொண்டிருந்தது. விழா நாயகன் அமருவதற்கென பிரத்யேகமான நாற்காலியும் மேடையில் போடப்பட்டிருந்தது .

விழா நடக்கும் அந்த மண்டபத்தின் வாசல் வரை சிகப்பு கம்பளமும் விரிக்கப்பட்டு மலர்களும் தூவப்பட்டிருந்தது.

நிகழ்ச்சி நடக்கும் மண்டப வாயிலில் இருந்து ,தெரு முனை வரை வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விழா முடிந்ததும் இரவு விருந்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தால் மக்கள் கூட்டம் அரங்கம் முழுவதும் நிரம்பி வழிந்தது.

பளபளக்கும் ஆடையில் விழா நாயகன் தொழிலதிபர் பரந்தாமன் மேடையில் அமர்ந்திருக்க, அவரை பாராட்டி புகழ்வதற்கென அரசியல் வாதிகள், ஆன்மீகவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் என விழா மேடையே கம்பீரமாக தோற்றமளித்தது.

அரசியல் கட்சியினர் கேட்ட போதெல்லாம் வாரி வழங்கும் வள்ளலே! வற்றாத ஜீவநதியே! நீங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் பெரும் வள்ளலாக வாழவேண்டும்; என்று வாழ்த்தி அமர்ந்தார் ஆளும் கட்சி பிரமுகர் ஆளவந்தார்.

நமது மாவட்டத்தில் மட்டுமல்ல! மாநிலம் முழுவதுமுள்ள பலநூறு திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு விழாவை சிறப்பாக நடத்திட, நிறைவாக பொருளுதவி செய்து வரும் அய்யா பரந்தாமன் ஆண்டு பல வாழ்ந்து பல்லாயிரம் கோவில்களுக்கு திருப்பணிகள் செய்ய வாழ்த்து கிறேன் என்றார் ஆலயங்கள் திருப்பணி இயக்க தலைவர் ஆறுமுக தாசன்.

ஊற்றாக உருவெடுத்து,உள்ளன்பாய் நிதி கொடுத்து, மும்மதத்தினர் மனதுக்குள்ளும் முழு நிலவாய் வாழ்ந்து வரும் வள்ளல் பெருமானே!

உங்கள் புகழை உலகெங்கும் பாடுவோம்! என்றார் இலக்கியச் சுடர் எழுத்தாளர் கௌரி மைந்தன்.

இவ்வாறு தொழிலதிபர் பரந்தாமனை போற்றி புகழ்ந்த, பாராட்டு விழாவில் பாரதி மக்கள் நல மன்றத்தின் சார்பில் வெள்ளிக் கிரீடம் சூட்டி, தங்கஜரிகையில் பொன்னாடையும் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது. விழா முடிந்த இரண்டு தினங்களுக்கு பிறகு, தொழிலதிபர் பரந்தாமன் பெயருக்கு அவரது வீட்டு முகவரிக்கு, கடிதம் ஒன்று அஞ்சல் மூலமாக வந்தது.

கடித உறையை ஆவலுடன் பிரித்து அதிலுள்ள, கடிதத்தை வெளியே எடுத்து படிக்கத் துவங்கினார்.

தொழிலதிபர் அய்யா அவர்களுக்கு பணிவான வணக்கம்! தங்களுக்கு பாராட்டு விழா நடத்திய விழா மண்டபத்திற்குள் நானும் வந்து கலந்து கொண்டேன். எனது பெயர் அன்பு வாணன். எனது தந்தை ஒரு கூலித் தொழிலாளி . நன்றாக நான் படிக்கக் கூடியவன் என்பதால் என்னை கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்துள்ளார். நான் முதலாமாண்டு பிகாம் படிக்கிறேன்.எனக்கிருக்கும் படிக்கும் ஆர்வத்தை கண்டு, என்னை எனது தந்தை மிகுந்த சிரமப்பட்டு படிக்க வைக்கிறார். அன்றாடம் கூலி வேலைக்கு சென்றால்தான் எங்கள் வீட்டில் நாங்கள் சாப்பிட முடியும். இப்படித்தான் ஏழை எளிய குடும்பத்தில் உள்ள நன்றாக படிக்கும் மாணவர்கள் பொருளாதாரத்தில் மிகுந்த சிரமத்தோடு கல்வி பயின்று வருகிறோம்.

கோவில்களுக்கு திருப்பணிகள் செய்யவும், அன்னதானம் செய்யவும் வசதி படைத்தவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். ஆனால் எங்களைப் போன்று நன்றாக படிக்கக் கூடிய ஏழை எளியவர்கள் பொருளாதார பாதிப்பில் தொடர்ந்து மேலே கல்வி பயில முடியாத சூழலில் இருந்து வருகிறோம். கல்லூரிக்கு தொடர்ந்து கல்வி கட்டணம் செலுத்த முடியாத சூழலில் படிப்பை பாதியில் விட்டவர்களும் உண்டு.

ஆதலால் தங்களிடம் எனது பணிவான ஒரு கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறேன். அதை நீங்கள் செயல்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

இதுநாள் வரை ஆன்மீகபணிகளுக்கும் மற்றும் பொதுக் காரியங் களுக்கும் தாங்கள் கோடிக் கணக்கில் செலவு செய்துள்ளீர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

ஆதலால் தாங்கள் மனது வைத்து எங்களைப் போன்று பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள ஏழை எளிய கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொடர்ந்து கல்வி பயில்வதற்கு பொருளுதவி செய்தால் நாங்கள் என்றென்றும் தங்களை தெய்வமாக வாழ்நாள் முழுவதும் போற்றிக் கொண்டாடுவோம். எங்கள் குடும்பத்தினரும் தாங்கள் செய்யும் பொருளாதார உதவியால் தங்களை கல்வி வள்ளலாக வணங்கி வாழ்த்திடுவோம்!

கடிதத்தை படித்த நிமிடம் முதல், பரந்தாமன் அப்படியே சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். சில நாட்கள் கடந்த நிலையில், தமிழ்நாட்டில் வெளிவரும் அனைத்து செய்தித் தாள்களிலும் இப்படி ஒரு தலைப்பு செய்தி வெளியாகி இருந்தது.

தொழிலதிபர் பரந்தாமன் தனது பெயரில் "கல்வி அறக்கட்டளை" ஒன்றை துவக்கியிருப்பதாகவும், அறக்கட்டளையின் சார்பில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும். அதற்காக எங்கள் அறக்கட்டளையைத் தொடர்பு கொள்ளலாம்; என்ற செய்தியை, நூலகத்தில் படித்த அன்பு வாணன் தொழிலதிபர் பரந்தாமனுக்கு நேரில் நன்றி தெரிவிக்க அவரது வீட்டை நோக்கி புறப்பட்டான்.

**நன்னிலம் இளங்கோவன்.**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*1. ஆங்கிலம் ஒரு அற்புதமான மொழி நான் பேசாதிருக்கும் வரை..*

*2. வீட்டை சுத்தப் படுத்துவதற்காகவே பண்டிகைகளை கண்டுபிடித்துள்ளான் தமிழன்.*

*3. வெயில் காலத்திற்கும் பனி காலத்திற்கும் நூல் அளவு தான் வித்தியாசம்.*

*எப்படா குளிக்க போறோம்னு யோசிச்சா அது வெயில் காலம்..*

*ஏன்டா குளிக்க போறோம்னு யோசிச்சா அது பனி காலம்..*

*# போதி தர்மனின் முந்தைய வாரிசு*

# தினம் ஒரு சமையல்



## மிளகு - பூண்டுக் குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1. பூண்டு(உரித்தது) | - ஒரு கப் |
| 2. தனியா | - 3 டேபிள் ஸ்பூன், |
| 3. மிளகு | - 2 டேபிள்ஸ்பூன், |
| 4. காய்ந்த மிளகாய் | - 4, |
| 5. உளுத்தம் பருப்பு, சீரகம் | - தலா 2 டீஸ்பூன், |
| 6. கடலைப்பருப்பு | - ஒரு டீஸ்பூன், |
| 7. கறிவேப்பிலை | - ஒரு கைப்பிடி, |
| 8. புளி | - சிறிய உருண்டை, |
| 9. நல்லெண்ணெய் | - ஒரு டேபிள்ஸ்பூன், |
| 10. கடுகு | - அரை டீஸ்பூன். |
| 11. உப்பு | - தேவையான அளவு |

செய்முறை:

1. முதலில் ஒரு பாத்திரத்தில் புளியை கரைத்து கொள்ளவும். கடாயில் தனியா, மிளகு, காய்ந்த மிளகாய், உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு ஆகியவற்றை சிவக்க வறுத்து ஆறிய பின்னர் மிக்ஸியில் போட்டு பொடிக்கவும்.



2. சீரகம், கறிவேப்பிலையைப் பச்சையாக அரைத்துக்கொள்ளவும். கரைத்த புளித்தண்ணீரில் கறிவேப்பிலை விழுது, வறுத்து அரைத்த பொடி, உப்பையும் போட்டுக் கட்டி இல்லாமல் கரைத்து வைத்துக்கொள்ளவும். கடாயில் அரை ஸ்பூன் எண்ணெய் விட்டு உரித்த பூண்டு சேர்த்து, லேசாகச் சிவக்கும் வரை வதக்கவும்.

3. அடுத்து அதில் புளிக்கரைசலைச் சேர்த்து, நன்றாகக் கொதிக்கவிடவும். கெட்டியானதும் இறக்கவும். மீதம் உள்ள எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துச் சேர்க்கவும். சுவையான சத்தான பூண்டு - மிளகுக்குழம்பு ரெடி.

## நீர்நொச்சி பயன்கள்



நொச்சி இலை என்னும் இயற்கை மருந்தின் முக்கிய மருத்துவ பயன்கள்

பாரம்பரிய மூலிகை மருத்துவங்களில், நொச்சி இலை (INDIAN NETTLE அல்லது VITEX NEGUNDO) தனது முழுமையான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் தன்மைகளால் சிறந்து விளங்குகிறது. ஆயுர்வேதத்தில் முக்கியமாகப் பேசப்படும் இந்த மூலிகை உங்கள் தினசரி ஆரோக்கியத்தை மேம்படுத்த பல்வேறு பயன்களைக் கொண்டுள்ளது. நொச்சி இலை எதைச் சிறப்பாக ஆக்குகிறது? அதன் மருத்துவக் குணங்களை ஆராய்ந்து பார்ப்போம்!

நொச்சி இலை பயன்கள்

1. சுவாச ஆரோக்கியத்துக்கு

நொச்சி இலை சுவாச ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. இதன் ஊட்டச்சத்து மற்றும் நச்சு நீக்கத் திறன், ஆஸ்துமா மற்றும் பிராங்கைடிஸ் போன்ற சுவாசம் சார்ந்த சிக்கல்களைத் தணிக்க உதவுகிறது. சுவாச பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் இந்த மூலிகை, காற்றோட்டத்தை சீராக்க உதவுகிறது.

2. மூட்டு வலிக்கு நிவாரணம்

மூட்டு வலி உங்கள் வாழ்க்கை தரத்தை குறைக்கலாம். நோச்சி இலை நச்சு நீக்க மற்றும் வலி நிவாரண குணங்களால், அர்திரிடிஸ் போன்ற காலத்தால் ஏற்பட்ட சிக்கல்களுக்கு சிகிச்சையளிக்கிறது. இது கைகால்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி நிம்மதியான வாழ்க்கையை வழங்குகிறது.

3. பாக்டீரியா எதிர்ப்பு குணங்கள்

நொச்சி இலை உங்கள் உடலுக்கு ஒரு இயற்கை பாதுகாப்பு கவசம். இதன் பாக்டீரியா எதிர்ப்பு திறன் உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்தி நோய்களைத் தடுக்க உதவுகிறது.

4. முழுமையான ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்

நொச்சி இலை உங்கள் உடல் மற்றும் மனநலத்தை சீராக்க உதவுகிறது. இயற்கை வழிகளில் ஆரோக்கியத்தை மேம்படுத்த விரும்பும் அனைவருக்கும் இது சிறந்த தேர்வு.

நொச்சி இலை சார்ந்த பொருட்களை உடனடியாக வாங்குங்கள்!

நொச்சி இலை [உலர்ந்த இலைகள்] வாங்கி அதன் மருத்துவ குணங்களை அனுபவிக்கவும். தங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்த ALLHERBS.COM வழியாக தனித்துவமான மூலிகைகளை அறிந்து, உங்கள் வாழ்க்கையை இன்னும் சிறப்பாக மாற்றுங்கள்!

இயற்கையின் அற்புதங்களைத் தழுவி, உங்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துங்கள்!

# ஜனநாயகன் ரிலீஸ் ஆகாததால் பொங்கல் ரேஸில் குதித்த படங்கள்!




இந்நிலையில் பொங்கல் ரேஸில் ஜனநாயகன் இல்லை என்பதால் மற்ற சில படங்கள் ரேஸில் குதித்து இருக்கின்றன.

கார்த்தி நடித்த வா வாத்தியார் படம் ஜனவரி 14ம் தேதி ரிலீஸ் ஏன் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதே போல மோகன்.ஜி இயக்கிய திரௌபதி 2 படமும் ஜனவரி 14ல் ரிலீஸ் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகன் படத்தின் சென்சார் பிரச்சனை தொடர்பான வழக்கில் நீதிமன்றம் தடை விதித்து இருப்பதால் அந்த படம் பொங்கலுக்கு வர வாய்ப்பில்லை. ஜனவரி 21ம் தேதி தான் அடுத்த கட்ட விசாரணை என சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அறிவித்து இருப்பதால் அதுவரை ஜனநாயகனுக்கு சென்சார் சான்றிதழ் கிடைக்காது என்றே தெரிகிறது.

அதனால் நாளை ரிலீஸ் ஆகும் பராசக்தி படம் மட்டும் சோலோவாக ரிலீஸ் ஆக இருக்கிறது. அந்த படத்திற்கு 600க்கும் மேல் தியேட்டர்கள் கிடைத்திருப்பதாக தெரிகிறது.




## சினிமா



ராஜா சாப் பட நடிகை ரிதி குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் தற்போது வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:

# பராசக்தி படத்தில் நடிக்க சிவகார்த்திகேயன் வாங்கிய சம்பளம்.. எவ்வளவு தெரியுமா



தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்களில் ஒருவர் சிவகார்த்திகேயன். இவர் நடிப்பில் உருவாகி இன்று வெளியாகியுள்ள படம்தான் பராசக்தி.

இயக்குநர் சுதா கொங்கரா இப்படத்தை இயக்க ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் நடித்துள்ளனர். ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டு இன்று இப்படம் வெளியாகியுள்ளது.

பெரிதும் எதிர்பார்ப்புடன் வெளிவரும் படங்களின் பட்ஜெட், ப்ரீ பிசினஸ், வசூல், படத்தில் நடித்தவர்கள் சம்பள விவரங்களை தெரிந்துகொள்ள ரசிகர்களுக்கு ஆர்வம் இருக்கும்.

இந்த நிலையில், பராசக்தி படத்தில் நடித்துள்ள நடிகர் சிவகார்த்திகேயனின் சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்திற்காக சிவகார்த்திகேயன் ரூ. 30 கோடி சம்பளம் + Profit Share என தகவல் தெரிவிக்கின்றனர்.

# மனிதனை வாட்டும் 5 விதமான தோஷங்கள்



ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் 5 விதமான தோஷங்கள் ஏற்படலாம் என்று ஆதி தமிழர்கள் கணித்து எழுதி வைத்துள்ளனர். ஒருவர் செய்யும் பாவங்கள், தவறுகள் எல்லாம் இந்த வகை தோஷத்துக்குள் வந்து விடுகிறது.

அந்த தோஷங்கள்

1. வஞ்சித தோஷம்,
2. பந்த தோஷம்,
3. கல்பித தோஷம்
4. வந்தூலக தோஷம்
5. ப்ரணகால தோஷம்

எனப்படும்.

**1. வஞ்சித தோஷம் :**

பார்க்கக் கூடாத படங்கள், வெறியூட்டும் காட்சிகள், காம சிந்தனைகள் உடலில் சூட்டை உண்டாக்கி, அவை பித்த நாடிகளைப் பாதிக்கச் செய்கிறது. இது உடலில் பல வியாதிகளை உண்டாக்குகிறது. இதற்கு வஞ்சிததோஷம் எனப்பெயர். உடன் பிறந்த சகோதரிகளை வணங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். சகோதரிகள் இல்லாதவர்கள் ஏழைப் பெண்களுக்குத் தானம் அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வஞ்சித தோஷம் விலகிவிடும். வேதசத்சங்கம்.

**2. பந்த தோஷம் :**

நம்மை நம்பி பழகியவர்களுக்குத் துரோகம் செய்வது அல்லது பழிவாங்குதல் பந்த தோஷமாகும். இந்த தோஷத்துக்கு தந்தை, தாய் வழிகளில் உள்ள மாமா, அத்தை, சித்தப்பா, பெரியப்பா ஆகியோருடைய பெண்களுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் பந்த தோஷம் விலகும். பகிரபடும் பகிர்வுகள் பிறர் அறிந்துக் கொள்வதற்காக தவிர பிறர் பிரதி உரிமையை மீறும் எண்ணம் இல்லை.. அசல் பதிவேற்றியவருக்கு நன்றி.

**3. கல்பித தோஷம் :**

பிறர் தன்னை விரும்புவதாக எண்ணிக் கொண்டு முறை தவறிப் பழகுதல் கல்பித தோஷமாகும். இத்தகைய தோஷம் ஏற்பட்டால் தன்னை விட வயதில் மூத்த பெண்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் கல்பித தோஷம் உடனடியாக விலகி விடும்.

**4. வந்தூலக தோஷம் :**

ஒருவர் தன்னைவிட வயது அதிகமுள்ள பெண்ணை திருமணம் செய்தால், அவருக்கு சுவாசக் கோளாறுகள், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படலாம். இவ்வாறு உருவாகும் தோஷத்திற்கு வந்தூலக தோஷம் எனப்படும். வந்தூலக தோஷம் நீங்க வேண்டுமானால் வயதான தம்பதிகளுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். வேஷ்டி, புடவை, துண்டு, ஆகியவற்றைத் தானமாக வழங்க வேண்டும். அறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்ச் சோலைத் தலத்திற்குச் சென்று முருகனைத் தரிசித்துப் பின் ஏழைத் தம்பதிகளுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும்.

**5. ப்ரணகால தோஷம் :**

திருமணப் பொருத்தங்கள் பார்க்காமல், பணம், புகழ், அந்தஸ்து, பதவி ஆகியவற்றுக்கு ஆசைப்பட்டு ஒருவர், திருமணம் செய்து கொண்டால், அவருக்கு ப்ரணகால தோஷம் ஏற்படும். இதனால் வாழ்க்கையில் பிடித்தம் இல்லாத நிலை காணப்படும். இந்த தோஷத்தை தவிர்க்க வேண்டுமானால் அனாதை விடுதியில் உள்ள பெண்களுக்குத் தான தர்மங்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ப்ரணகால தோஷங்கள் நிவர்த்தியாகும்.

உலகின் முதல்வனே அகிலம் காக்கும் தந்தை அண்ணாமலையாரே உன் மலர் பாதம் சரணம் **சிவாய நம சிவமே ஜெயம் சிவமே தவம் . சிவனே சரணாகதி. சிவமே என் வரமே.

# தினம் ஒரு தலைவர்கள் பொ.திருகூடசுந்தரம் வரலாறு

பொ. திருகூடசுந்தரம் இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தமிழ் எழுத்தாளர், வழக்கறிஞர், இதழாளர் என பன்முகத்தன்மை கொண்டவர் ஆவார்.

பிறப்பும் படிப்பும்

பொ. திருகூடசுந்தரம் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் (அன்றைய திருநெல்வேலி மாவட்டம்) உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் திருவைகுண்டத்தில் பொன்னம்பலம் பிள்ளை சொர்ணாம்பாள் என்னும் இணையருக்கு 1891ஆம் ஆண்டில் பிறந்தார். திருவைகுண்டத்திலேயே தொடக்கக்கல்வி பயின்ற அவர்,5ஆம் படிவம் முதலே படிப்பில் முதலாமவராகத் திகழ்ந்தார். திருநெல்வேலியில் பயின்று கலை இளவர் (BACHELOR OF ARTS) பட்டம் பெற்ற பின்னர், சென்னை மாநிலக் கல்லூரியில் (PRESIDENCY COLLEGE) சேர்ந்து, கலைமுதுவர் (MASTER OF ARTS) தேர்வில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று சட்ட இளவர் (BACHELOR OF LAW) பட்டம் பெற்றார். இவர் கமலம் என்பவரை சாதிமறுத்தும் புரோகிதச்சடங்குமறுத்தும் தாலிகட்டுதல் மறுத்தும் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டார். இத்திருமணம் திருநெல்வேலி சிந்துபூந்துறையில் 1931 அக்டோபர் மாதம் நடைபெற்றது.

தொழிலும் போராட்டமும்

திருகூடசுந்தரம் சட்ட இளவர் பட்டம் பெற்றதும் நீதிமன்றத்தில் பதிந்து வழக்கறிஞர் தொழில் புரிந்து வந்தார். 1921ஆம் ஆண்டில் ஆங்கிலேயே அரசிற்கு எதிராக அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடும்படி காந்தி அழைப்புவிடுத்தார். அதனையேற்று திருகூடசுந்தரமும் தனது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். 1939ஆம் ஆண்டில் வேதாரண்யம் என்னும் மரைக்காட்டில் (மான்கள் நிறைந்த காடு) நடைபெற்றஉப்புச்சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு சிறைசென்றார்.


காந்தியப் பணிகள்

பின்னர் திருநெல்வேலி மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் செட்டிநாட்டுப் பகுதியிலும் காந்திய இயக்கத்தை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டார். செட்டிநாட்டு இளைஞர்களைத் திரட்டி அப்பகுதியில் உள்ள ஊர்களை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டார். அப்பணியைப் பாராட்டி குமரன் இதழின் ஆசிரியர் சொ. முருகப்பா, தோட்டி மகாத்துமா என திருகூடசுந்தரத்தைப் புகழ்ந்து கட்டுரை எழுதினார். அப்பணியை மற்றவர்கள் எவ்வாறு எள்ளிநகையாடியவர்களைப் பற்றி ஊழியன் இதழின் திருகூடசுந்தரம் கட்டுரைகள் எழுதினார்.

தீண்டாமை ஒழிக்க சாதிகடந்த திருமணங்களை காந்தி ஊக்குவித்தார். எனவே, திருகூடசுந்தரமும் சாதிகடந்து திருமணம் செய்துகொண்டார். அதன்பின்னர் நாகர்கோவிலில் இவரும் இவர்தம் மனைவியாரும் தங்கி அப்பகுதியில் உள்ள கோயில்களில் தாழ்த்தப்பட்டவர்களின் ஆலய நுழைவுப் போராட்டங்களை நடத்தினர். இவர்களுக்கு பொன்னம்பலம் என்னும் மகனும் சொர்ணாம்பாள் என்னும் மகளும் பிறந்தனர்.

வகித்த பொறுப்புகள்

திருநெல்வேலி நகர சபையில் உறுப்பினர். தேவகோட்டை நகரசபையில் துணைத் தலைவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் அவை உறுப்பினர். சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் கூட்டாசிரியர்.



# சத்தீஸ்கர் மாநிலத்தில் 63 நக்சலைட்கள் சரண்

**தந்தேவாடா, ஜன.11:**

சத்தீஸ்கரின் தந்தேவாடா மாவட்டத்தில் 63 நக்சலைட்கள் நேற்று சரணடைந்தனர். இதில், 18 பேர் பெண்கள் ஆவர். குறிப்பாக, 7 பேருக்கு தலா ரூ.8 லட்சம் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தது. மற்ற 7 நக்சலைட்களுக்கு தலா ரூ. 5 லட்சம், 8 பேருக்கு தலா ரூ. 2 லட்சம், 11 பேருக்கு தலா ரூ.1 லட்சம் மற்றும் 3 பேருக்கு தலா ரூ. 50,000 பரிசுத்தொகை என 36 பேரின் தலைக்கு மொத்தம் ரூ. 1,19,50,000 வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது. மாநில அரசின் மறுவாழ்வு கொள்கையால் ஈர்க்கப்பட்டு நக்சலைட்கள் சரணடைய முன்வந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தலா ரூ. 50,000 உதவித் தொகை உடனடியாக வழங்கப்படும். நக்சலைட்கள் ஆதிக்கத்தை வரும் மார்ச் 31-க்குள் முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# லாலு, ராப்ரி தேவி மீது குற்றச்சாட்டு பதிய உத்தரவு



**புதுடெல்லி, ஜன.11:**

காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் கடந்த 2004 - 2009 கால கட்டத்தில் ரயில்வே அமைச்சராக ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் லாலு பிரசாத் பதவி வகித்தார். அப்போது, நிலத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்டு ரயில்வேயில் வேலை அளித்ததாக லாலு, அவரது குடும்பத்தினருக்கு எதிராக சிபிஐ கடந்த 2022-ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தது. அதன் அடிப்படையில் அமலாக்கத் துறையும் வழக்கு பதிவு செய்துள்ளது.

இந்த வழக்குகளை டெல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் கோக்னே விசாரித்து வருகிறார். இந்த வழக்கில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது, லாலுவுக்கு எதிராக ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழும், மீதமுள்ள அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக மோசடி, குற்றச் சதி ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய சிபிஐக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# இமாசல பிரதேசம்: பஸ் விபத்தில் பலி எண்ணிக்கை 14 ஆக உயர்வு; இழப்பீடு அறிவித்த பிரதமர் மோடி

**சிம்லா, ஜன.11:**

இமாசல பிரதேசத்தின் சிர்மாவுர் மாவட்டத்தில் சிம்லா நகரில் இருந்து குப்வி நகர் நோக்கி சென்ற தனியார் பஸ் ஒன்று நேற்று 500 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது. இதில் பலர் பலியானார்கள். பயணிகள் 30-க்கும் மேற்பட்டோருக்கு காயமும் ஏற்பட்டது. அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், பஸ் விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்து உள்ளது. இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளதுடன், இழப்பீடும் அறிவித்து உள்ளார். இதன்படி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் அளிக்கப்படும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்து உள்ளது.

# ஆந்திரத்தைச் சேர்ந்த மாணவர் அமெரிக்காவில் மாயம்! தேடும் பணி தீவிரம்!!

**விஜயவாடா, ஜன.11:**

ஆந்திர மாநிலம் குண்டூர் பகுதியைச் சேர்ந்த ஹரி கிருஷ்ணா ரெட்டி (24) என்பவர் அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலையில் எம்எஸ் படித்து வந்த நிலையில், அவரைக் காணவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அலாஸ்காவுக்கு கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கொண்டாட தனியாக சுற்றுலா சென்ற ஹரி, டிச.31ஆம் தேதியன்று காணாமல் போனதாகவும், அவரைப் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. டெக்ஸாஸிலிருந்து டிச.22ஆம் தேதி தனியாக சுற்றுலா புறப்பட்ட ஹரி, டெனாலி என்ற இடத்தில் அறையை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளார். அங்கிருந்து, டிசம்பர் 31ஆம் தேதி அவரது தொடர்பு எண்ணுக்கான சிக்னல் கடைசியாகக் கிடைத்துள்ளது. அதன்பிறகு அவர் எங்குச் சென்றார் என்ற தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவரது நண்பர்கள், உள்ளூர் காவல்துறை உதவியுடன் காணாமல் போன ஹரியை தேடும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அவரது புகைப்படத்துடன் நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டு, சமூக வலைத்தளங்களிலும் அவரைப் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

# ஜவுளித் துறை தரவுக் கட்டமைப்பு மேம்பாடு 15 மாநிலங்களுடன் மத்திய அரசு ஒப்பந்தம்

**புதுடெல்லி, ஜன.11:**

ஜவுளித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஜவுளித் துறை தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான செயலமைப்பை உருவாக்க 15 மாநிலங்களுடன் மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. டெக்ஸ்-ராம்ப்ஸ் திட்டத்தின் கீழ் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. ஜவுளித் துறை சார்ந்த புள்ளிவிவரங்களின் தரம், நேரத் துல்லியம், நம்பகத்தன்மையை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. குவாஹாட்டியில் நடைபெற்ற தேசிய ஜவுளித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

# போலி வங்கி கணக்குகள்... நூதன முறையில் ரூ.11 கோடி மோசடி - ஒடிசாவில் கும்பல் கைது



**பூரி, ஜன.11:**

உதவி போலீஸ் சூப்பிரெண்டு ராமேந்திர பிரசாத் கூறும்போது, 3 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கொண்ட கும்பல் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்கள், வெவ்வேறு பெயர்களில் போலியாக வங்கி கணக்குகளை தொடங்கி, சைபர் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு, அவர்கள் பயன்படுத்தி கொள்ள உதவியாக அவற்றை கொடுத்து விடுவார்கள் என்றார்.

இதற்கு முன்பு, 22 சைபர் குற்ற வழக்குகளில் ரூ.6 கோடி வரை மோசடி நடந்து உள்ளது. இதில் ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில் உள்ள நபர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என தகவல்கள் வெளிவந்தன என கூறினார். இதுதொடர்பாக நடந்த விசாரணையில் மேற்கண்ட திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த கும்பலில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடமிருந்து பல்வேறு வங்கிகளில் தொடங்கப்பட்ட 16 போலி வங்கி வைப்பு கணக்குகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அவர்களிடம் இருந்து, 8 ஏ.டி.எம். கார்டுகள், ஒரு லேப்டாப், 11 மொபைல் போன்கள் மற்றும் பாஸ்போர்ட் ஒன்று ஆகியவற்றையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த கும்பலில் ஒருவர் ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் செயல்படும் ஒரு தனியார் நிதி நிறுவனத்தின் ஊழியராக உள்ளார். துசார்காந்தி தாஸ் என்ற அந்நபருடன், குற்றம் சாட்டப்பட்டவர்களான அபினாஷ் மகபத்ரா, கிரண் குமார் பெஹேரா, கோபால் சிங் மற்றும் பாதல் குமார் ஸ்வைன் ஆகிய 4 பேருக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இதுவரை ரூ.11 கோடி வரை மோசடி நடந்துள்ளது தெரிய வந்துள்ளது. இந்த சைபர் மோசடியில் வேறு சில நபர்களுக்கும் தொடர்பு இருக்க கூடும் என போலீசார் சந்தேகம் தெரிவித்து உள்ளனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட ஆம் ஆத்மி எம்எல்ஏ.க்கள் 4 பேர் சஸ்பெண்ட்



**புதுடெல்லி, ஜன.11:**

டெல்லி சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஆம் ஆத்மி மூத்த தலைவர் ஆதிஷி, சீக்கியர்கள் வணங்கும் குரு தேஜ் பகதூர் குறித்து அவதூறான கருத்துகளை கூறியதாக ஆளும் பாஜக.வினர் குற்றம் சாட்டினர்.

அவரை எம்எல்ஏ பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாஜக.வினர் குரல் எழுப்பினர். இதையடுத்து ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை தடயவியல் ஆய்வுக்கு அனுப்ப சபாநாயகர் விஜயேந்திர குப்தா உத்தரவிட்டார். இந்நிலையில், நேற்று காலை பேரவை கூடியது. அப்போது ஆத் ஆத்மி எம்எல்ஏ.க்கள் அவை நடுவில் வந்து, “ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை பாஜக.வினர் தொடர்ந்து சமூக வலைதளங்களில் வெளியிடுகின்றனர். இந்த விவகாரத்தை தடயவியல் ஆய்வுக்கு சபாநாயகர் அனுப்பி உள்ளார். அதனால், வீடியோவை வெளியிடக் கூடாது என்று பாஜக.வினருக்கு உத்தரவிட வேண்டும்” என்று வலியுறுத்தினர்.

அதற்கு பாஜக எம்எல்ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து ஆம் ஆத்மிஎம்எல்ஏ.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து, ஆம் ஆத்மி எம்எல்ஏ.க்கள் சோம் தத், ஜர்நெய்ல் சிங், சஞ்சீவ் ஜா, குல்தீப் குமார் ஆகிய 4 பேரையும் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்வதாக சபாநாயகர் அறிவித்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

# கேரள பள்ளிகளில் மலையாளம் கட்டாயம்: மசோதாவுக்கு கர்நாடக மாநிலம் எதிர்ப்பு

**பெங்களூரு, ஜன.11:**

கேரள பள்ளிகளில் 10-ம் வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாக மலையாளம் கற்க வகை செய்யும் சட்ட மசோதா கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை விரைவில் சட்டமாக்க மாநில அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு கர்நாடக அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கர்நாடக எல்லையோர மக்கள் வளர்ச்சி வாரியத்தின் சார்பில் அதன் செயலாளர் பிரகாஷ் மத்திஹள்ளி உள்ளிட்ட நிர்வாகிகள் கேரள மாநில ஆளுநர் ராஜேந்திர அர்லேகரிடம் மனு அளித்தனர்.

அதில் கூறியிருப்பதாவது: கேரளாவின் வயநாடு, காசர்கோடு ஆகிய எல்லையோர மாவட்டங்களில் கன்னடர்கள் பரவலாக வாழ்கின்றனர். குறிப்பாக காசர்கோடு மாவட்டத்தில் 70 சதவீதத்துக்கும் அதிகமான எண்ணிக்கையில் கன்னடர்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்களின் தாய்மொழியான கன்னடத்தை கற்று வருகின்றனர்.

கேரள அரசின் மலையாள கட்டாய மசோதா அமல்படுத்தப்பட்டால், கன்னடர்கள் கன்னடம் கற்க முடியாத நிலை ஏற்படும். அரசியலமைப்பின் 350-வது பிரிவு மொழி சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பது மாநிலத்தின் கடமை என்று குறிப்பிடுகிறது.

கேரள அரசு மலையாளத்தை கட்டாயமாக்குவது மொழி சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு எதிரானது. இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரான அந்த மசோதாவை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டு உள்ளது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கைக்கு கேரள அரசு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

# மதநம்பிக்கை, சட்டப்படி ஏற்பாடுகள் செய்யப்படும்: அர்த்த கும்பமேளா பற்றி உத்தராகண்ட் முதல்வர் உறுதி



**புதுடெல்லி, ஜன.11:**

உத்தராகண்ட் மாநிலம் ஹரித்வாரில் 2027, ஜனவரி 14 முதல் அர்த்த கும்ப மேளா நடைபெற உள்ளது. இதை பிரம்மாண்டமாக நடத்த மாநில பாஜக அரசு தயாராகி வருகிறது. இந்நிலையில் அர்த்த கும்பமேளா நாட்களில் உத்தராகண்டின் 100-க்கும் மேற்பட்ட கங்கை படித்துறைகள், முக்கிய இந்து வழிபாட்டுத் தலப்பகுதியில் இந்துக்கள் அல்லாதோருக்கு தடை விதிக்க இந்துத்துவாவினர் வலியுறுத்துகின்றனர். இதுதொடர்பாக 1916-ல் ஆங்கிலேயர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹரித்வார் நகராட்சி மன்ற துணை விதிகளை கங்கை சபையின் தலைவர் நிதின் கவுதம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விதிகளின்படி, ஹரித்வார் நகராட்சிப் பகுதியில் இந்துக்கள் அல்லாதோர் நிலம் வாங்க முடியாது. இந்துக்கள் அல்லாத கடை வியாபாரிகள் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும். சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இந்துக்கள் அல்லாத அதிகாரிகளை பணி அமர்த்தவும் முடியாது. எனினும், காலப்போக்கில், உள்ளூர் மக்கள் கூட இந்த விதிகளைப் பெரிதாகப் பின்பற்றுவதில்லை. தற்போது, கும்பமேளா வரவுள்ள நிலையில், இந்துத்துவாவினர் ஆங்கிலேயர் காலத்து மரபுகளை மீண்டும் அமல்படுத்தக் கோரியுள்ளனர்.

ஹரித்வார் கங்கை சபையின் மூத்த நிர்வாகி உஜ்வல் பண்டிட் கூறுகையில், “முன்னாள் ஆளுநர் அஜீஸ் குரேஷி, மார்கரெட் ஆல்வா, சமாஜ்வாதி தலைவர் ஆசம் கான், நடிகர் சல்மான்கான், நடிகை கத்ரீனா கைஃப் உள்ளிட்ட இந்து அல்லாத பிரமுகர்கள் ஹரித்வார் துணை விதிகளை மதித்துள்ளனர். ஆளுநர் அஜீஸ் குரேஷி, ஹர்-கி-பவுரிக்கு செல்லாமல் ஆரத்தியை, மால்வியா தீவில் இருந்து பார்த்தார்” என்றார்.

இந்நிலையில் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஹரித்வாரின் புனிதம் மற்றும் தெய்வீகத் தன்மையைப் பேணுவதற்காக அனைத்து அம்சங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன.

எந்தவொரு பழைய சட்டத்தையும் அல்லது துணை விதிகளையும் மீற அரசு விரும்பவில்லை. மத நம்பிக்கைகள், அரசியலமைப்பு சட்டம் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அதிர்ஷ்டம் இருந்தால் தான் ஏழுமலையான் தரிசனமா? - ரூ.10,500 டிக்கெட்டுகளில் கூட ஆன்லைன் குலுக்கல் முறை



**திருமலை, ஜன.11:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில், ரூ.300 சிறப்பு தரிசனம், ஆர்ஜித சேவைகள், ஸ்ரீவாணி அறக்கட்டளை (ரூ.10,500) டிக்கெட்டுகள் என அனைத்தும் ஆன்லைன் முன்பதிவு முறை அமல்படுத்தப்படுவதால், இனி அதிர்ஷ்டம் இருந்தால் மட்டுமே திருப்பதி ஏழுமலையானை ஒரு பக்தன் தரிசிக்க இயலும் எனும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பக்தர்களிடையேயும் கடும் அதிருப்தி நிலவி வருகிறது.

இன்று முதல் ஸ்ரீவாணி அறக்கட்டளை டிக்கெட் வழங்கும் முறையிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது, ஒரு பக்தர், ரூ.10,000 தேவஸ்தானத்திற்கு நன்கொடை வழங்கி, ரூ.500 டிக்கெட் கட்டணமாக செலுத்தி (மொத்தம் ரூ.10,500) சுவாமியை தரிசித்து வந்தனர்.

இதற்காக திருமலையில் தினமும் 800 டிக்கெட்டுகளும், திருப்பதி விமான நிலையத்தில், விமான பயணிகளுக்கென 200 டிக்கெட்டுகளும் என மொத்தம் நாள் ஒன்றுக்கு 1,000 டிக்கெட்டுகளை வழங்கி வந்தது. இதற்கு பக்தர்களிடையே கடும் போட்டி நிலவியது.

ஆனால், இன்று (9-ம் தேதி) முதல் இதுவும் ரத்து செய்யப்பட்டு, காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஸ்ரீவாணி அறக்கட்டளை டிக்கெட் தேவைப்படும் பக்தர்கள் தங்களது செல்போன் மூலம் டிக்கெட்டுகளை ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பின்னர், அவர்களுக்கு மதியம் 2 மணிக்கு பின்னர், டிக்கெட்டுகள் செல்போன்களுக்கே அனுப்பி வைக்கப்படும். அதனை ‘பிரிண்ட்’ எடுத்து கொண்டு, அதே நாள் மாலை 4 மணிக்கு சுவாமியை தரிசிக்கலாம். இது இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதுவும் அதிர்ஷ்டம் இருந்தால்தான் டிக்கெட் கிடைக்கும்.

800 பேருக்கும் மேல் டிக்கெட்டை முன்பதிவு செய்திருந்தால், மீதமுள்ளவர்களுக்கு டிக்கெட் கிடைக்காது. இவர்கள் மறுநாள் மீண்டும் இதே போல் தங்களது அதிர்ஷ்டத்தை சோதித்து கொள்ள வேண்டும்.

# ‘அமித்ஷாவுக்கு எதிரான ஆதாரங்களை கொண்ட பென் டிரைவ் என்னிடம் உள்ளது’ - மம்தா பானர்ஜி

**கொல்கத்தா, ஜன.11:**

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள திரிணாமுல் காங்கிரஸ் ஐ.டி. பிரிவுத் தலைவருக்கு சொந்தமான இடங்களில் கடந்த வியாழக்கிழமை அமலாக்கத்துறையினர் நடத்திய சோதனைகளை கண்டித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மேற்கு வங்க முதல்-மந்திரி மம்தா பானர்ஜி, அமலாக்கத்துறை சோதனையை கண்டித்து கொல்கத்தாவில் மாபெரும் பேரணி நடத்தினார். இதன் பின்னர் பேசிய அவர், “நிலக்கரி ஊழல் பணம் டெல்லியில் உள்ள தலைவர்களிடம் சென்று சேர்ந்துள்ளது. என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. தேவைப்பட்டால் அதை நான் வெளியிடுவேன்.

நிலக்கரி ஊழல் பணம் பா.ஜ.க.வை சேர்ந்த சுவேந்து அதிகாரி மூலம் மத்திய மந்திரி அமித்ஷாவுக்கு போயிருக்கிறது. அமித்ஷாவுக்கு எதிரான ஆதாரங்களை கொண்ட பென் டிரைவ் என்னிடம் உள்ளது. நான் வழக்கமாக எதிர்வினை ஆற்றுவதில்லை. ஆனால் யாராவது என்னைத் தூண்டிவிட்டால், நான் அவர்களை விடமாட்டேன்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சீனாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி 33 சதவீதம் அதிகரிப்பு

**புதுடெல்லி, ஜன.11:**

ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளை தண்டிக்க அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார். அதன்படி ரஷியாவிடம் இருந்து இந்தியா மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்குவதை தடுப்பதற்காக இந்திய பொருட்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரி விதித்தார்.

இதன் தொடர்ச்சியாக, ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் கைவிடுவதற்காக, அந்நாடுகள் மீது 500 சதவீத வரி விதிக்க டிரம்ப் திட்டமிட்டுள்ளார். இது தொடர்பாக புதிய மசோதா ஒன்றை அமெரிக்க செனட் உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் மற்றொரு உறுப்பினர் புளூமெந்தாருடன் இணைந்து உருவாக்கி இருக்கிறார்.

ரஷியா பொருளாதார தடை மசோதா எனப்படும் இந்த மசோதாவுக்கு டிரம்ப் தற்போது ஒப்புதல் அளித்து உள்ளார். இது விரைவில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா அதிக வரி விதிப்பதால், ஏற்றுமதிக்கு வேறு நாடுகளை இந்தியா நாடத் தொடங்கி உள்ளது. அதன்படி, இந்தியா அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தில் சீனாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 1,222 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 33 சதவீதம் அதிகம். எண்ணெய் உணவுப்பொருட்கள், கடல்சார் தயாரிப்புகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், மசாலா பொருட்கள் ஆகியவற்றால் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

# வைகுண்ட ஏகாதசியையொட்டி 10 நாட்களில் திருப்பதியில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம்

**திருப்பதி, ஜன.11:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி கடந்த 10 நாட்களில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். ரூ.41.14 கோடி உண்டியல் காணிக்கை கிடைத்துள்ளது.

இது தொடர்பாக அறங்காவலர் குழு தலைவர் கூறியதாவது:-

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி கடந்த மாதம் 30-ந்தேதி வைகுண்ட வாயில் திறக்கப்பட்டு நேற்று வரை 10 நாட்களுக்கு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நடைபெறாமல் 2 ஆயிரம் போலீசார், 1,150 தேவஸ்தான விஜிலென்ஸ் பாதுகாப்பு பணியாளர்கள், மாவட்ட நிர்வாகத்தினருடன் இணைந்து திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் முழு அர்ப்பணிப்புடன் பக்தர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

10 நாட்களில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்து உண்டியலில் ரூ.41.14 கோடி காணிக்கை செலுத்தியுள்ளனர்.

44 லட்சம் லட்டுகளை பக்தர்கள் பெற்று சென்றுள்ளனர். 2.60 லட்சம் பக்தர்கள் மொட்டை அடித்து தங்கள் தலைமுடிகளை காணிக்கையாக செலுத்தினர். கடந்த ஆண்டு 6.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்த நிலையில் இந்த ஆண்டு ஒரு லட்சம் பக்தர்கள் கூடுதலாக வைகுண்ட வாயில் வழியாக சாமி தரிசனம் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டை காட்டிலும் 10 லட்சம் லட்டுகள் கூடுதலாக தயார் செய்து பக்தர்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.




## தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸ் அதிகாரி என மிரட்டி பெண்ணிடம் ரூ.20 லட்சம் டிஜிட்டல் மோசடி



**சென்னை, ஜன.11:** தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸ் அதிகாரி என மிரட்டி, பெண்ணிடம் டிஜிட்டல் மோசடியில் பறிக்கப்பட்ட ரூ.20 லட்சத்தை சைபர் க்ரைம் போலீஸார் 14 நாட்களில் மீட்டுக் கொடுத்துள்ளனர்.

சென்னை முகப்பேர் மேற்கு, அண்ணாமலை அவென்யூவில் வசிப்பர் லதா(54). கைவினைப் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இவரது செல்போனுக்கு கடந்த 23-ம் தேதி வந்த அழைப்பில் பேசிய நபர், தன்னை சென்னை தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸ் அதிகாரி என அறிமுகம் செய்து கொண்டுள்ளார்.

தொடர்ந்து அவர், 'நீங்கள் தீவிரவாதிகளுக்கு பண உதவி செய்துள்ளீர்கள். உங்களது வங்கி கணக்கு விபரங்களை பரிசோதித்ததில், இது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, உங்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளோம்.

சிறிது நேரத்தில் உங்களையும் உங்கள் கணவரையும் கைது செய்ய உங்கள் வீட்டுக்கு வர உள்ளோம்' என மிரட்டினார். பயந்துபோன லதா, 'நாங்கள் அப்படி எதுவும் செய்யவில்லை' என மறுத்துள்ளார்.

ஆனால், அந்த நபர் வீடியோ கால் வழியாக தொடர்ந்து மிரட்டி, அவர்களை 3 நாள் வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாமல் டிஜிட்டல் கைது செய்து வைத்துள்ளார்.

பின்னர், 'நீங்கள் நிரபராதி என நிரூபிக்க வேண்டும் என்றால், நாங்கள் சொல்லும் வங்கி கணக்குக்கு உங்கள் வங்கி கணக்கில் உள்ள பணம் முழுவதையும் பரிமாற்றம் செய்யுங்கள்.

உங்கள் மீது குற்றம் இல்லை என்றால், விசாரணை செய்துவிட்டு மீண்டும் பணத்தை உங்களது வங்கிகணக்குக்கு அனுப்பி விடுகிறோம்' என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து லதா, அந்த நபர் தெரிவித்த வங்கி கணக்குக்கு ரூ.20 லட்சம் அனுப்பி வைத்துள்ளார். அதன்பிறகு மிரட்டல் விடுத்த நபரை தொடர்புகொள்ள முடியவில்லை. இதையடுத்து, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த லதா, இதுதொடர்பாக சென்னை மேற்கு மண்டல சைபர் க்ரைம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதைத் தொடர்ந்து, போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், விசாகப்பட்டினத்தில் உள்ள தனியார் நிறுவன கணக்குக்கு அந்த பணம் சென்றிருப்பதை உறுதி செய்து, அந்த மாநில போலீஸார் உதவியுடன் லதாவின் ரூ.20 லட்சத்தை முடக்கினர்.

பின்னர், அந்த பணத்தை லதாவிடமே, 14 நாட்களில் மீட்டுக் கொடுத்தனர். மேலும், போலீஸ் அதிகாரி என மிரட்டிய நபரைக் கைது செய்ய தனிப்படை அமைக்கப் பட்டுள்ளது.

## குறைந்த வட்டிக்கு நகை கடன் தருவதாக ரூ.2 கோடி மோசடி: தனியார் நிதி நிறுவனத்தினர் கைது



**சென்னை, ஜன.11:** மவுலிவாக்கத்தைச் சேர்ந்தவர் கணேஷ். தனியார் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். இவருக்கு சேத்துப்பட்டைச் சேர்ந்த, தனியார் நிதி நிறுவனம் நடத்தி வரும் சுரேந்தர், அந்நிறுவனத்தில் இயக்குநராக உள்ள சூளைமேட்டைச் சேர்ந்த காஜா மொய்தீன் பஷித் ஆகியோரது அறிமுகம் கிடைத்தது.

இந்நிலையில், தொழிலை விரிவுபடுத்தும் வகையில் தன்னிடமிருந்த 238 பவுன் நகைகளை (சுமார் ரூ.2 கோடி மதிப்பு) வங்கியில் அடமானம் வைத்து ரூ.1 கோடி பணம் பெற்றிருந்தார்.

அதை மீட்க முடியாமல் தவித்தார். அப்போது, சுரேந்தர் நாங்கள் உங்கள் நகைகளை மீட்டு தருகிறோம். மேலும், எங்கள் நிதி நிறுவனத்தில் அடமானம் வைத்தால் அதிக பணம் தருகிறோம். அதோடு குறைந்த வட்டி என ஆசைவார்த்தை கூறினர். இதையடுத்து, நகை மீட்கப்பட்டு, சுரேந்தர் நிதி நிறுவனத்தில் மறு அடகு வைக்கப்பட்டது.

ஆனால், உறுதி அளித்தபடி நகைக்கான கூடுதல் பணத்தை தராமல் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இதையடுத்து, கணேஷ் தனது நகை கடன் முழுவதையும் வட்டியுடன் தந்து விடுவதாகக் கூறி மொத்த நகைகளையும் திரும்பத் தருமாறு கேட்டபோது நகைகள் திரும்ப கொடுக்கப்படவில்லை.

இதனால், விரக்தி அடைந்த கணேஷ் இது குறித்து சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்ததார். அதன்படி, சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், நகை பெற்று மோசடி செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, சுரேந்தர், காஜா மொய்தீன் பஷித் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

## ரூ.70 லட்சம் மோசடி வழக்கில் ஹரி நாடார் கைது



**சென்னை, ஜன.11:** தொழிலதிபரிடம் ரூ.70 லட்சம் மோசடி செய்த திருநெல்வேலியைச் சேர்ந்த ஹரி நாடாரை போலீஸார் கைது செய்துள்ளனர். சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு, தனது தொழிலை விரிவுபடுத்துவதற்காக பணம் தேவைப்பட்டது.

தனது நண்பர் மூலம் திருநெல்வேலியைச் சேர்ந்த பனங்காட்டு படை கட்சி ஒருங்கிணைப்பாளர் ஹரி நாடாரை அணுகினார். அப்போது, ரூ.35 கோடி கடன் பெற்றுத் தருவதாக உறுதியளித்த ஹரி நாடார், அதற்குப் பிரதிபலனாக ரூ.70 லட்சத்தை தொழிலதிபரிடம் பெற்றுக் கொண்டார்.

ஆனால், கடன் பெற்றுத் தரவில்லை, வாங்கிய ரூ.70 லட்சத்தையும் அவர் திருப்பி தரவில்லை. இந்நிலையில், தொழிலதிபர் அளித்த புகாரின் அடிப்படையில், மாநகர மத்திய குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்தினர்.

இதில் ரூ.70 லட்சம் மோசடி செய்தது உறுதியான நிலையில், ஹரி நாடார், உடந்தையாக இருந்த சேலத்தை சேர்ந்த பாபு ஆகியோரை நேற்று கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## வேட்டைக்காரன்பட்டியில் பொங்கல் பரிசு தொகுப்பு



தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சி வேட்டைக்காரன்பட்டி ரொக்கம் ரூ 3000 மற்றும் கரும்பு, அரிசி,சக்கரை உள்ளிட்டிவைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் முன்னிலையில் வழங்கப்பட்டன

## பொங்கல் தொகுப்பு



ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளத்தில் இன்று தமிழக முதல்வரின் பொங்கல் தொகுப்பு வழங்கபட்டது உடன் திமுக கிளை செயலாளர் ஜஹாங்கீர் அலி உள்ளார்

## போதைப்பொருட்கள் விழிப்புணர்வு



கரூர் செய்தியாளர் மரியான் பாபு படங்கள் மூலம் மாணவர்களுக்கு கேள்வி பதில் விளக்கம்.. கரூர் மாவட்டம் காந்திகிராமத்தில் அமைந்துள்ள அரசு நடு நிலைப்பள்ளியில் குழந்தைகள் தடுப்பு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ராஜேஸ்வரி,சம்சாத் பேகம் ஆகிய இருவரும் பள்ளிக்குழந்தைகளுக்கு போக்சோ, செல்லிடப்பேசி பயன்பாடு,தலைக்கவசம் அணிதல், போதைப்பொருட்கள் பயன்பாடு போன்ற விழிப்புணர்வுகளை படங்கள் மூலமாகவும், கேள்வி பதில் மூலமாகவும் மாணவர்களுக்கு விளக்கம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் மாணவ,மாணவியர்களின் பெற்றோரும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் பூங்கொடி, உதவி ஆசிரியர்கள் திலகவதி, ராமலக்ஷ்மி, தமிழ்ச்செல்வி,ரேவதி, புவனேஸ்வரி சாந்தி அன்புக்கரசி,மனோன்மணி ஆகியோர் உடன் இருந்தனர்.

## அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல தேவை இல்லை- 'வாட்ஸ்-அப்' மூலம் 51 அரசு சேவைகளை மக்கள் எளிதில் பெறலாம்




**சென்னை, ஜன.11:** 'வாட்ஸ்-அப்' மூலம் 51 அரசு சேவைகள் பெறும் விதமாக "நம்ம அரசு" வாட்ஸ்-அப் சாட்பாட் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பொதுமக்கள் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதலில் ஒரு புரட்சிகரமான மைல் கல்லாக, தமிழ்நாடு மின்னாளுமை முகமை "நம்ம அரசு" வாட்ஸ்-அப் சாட்பாட் சேவையை மாநிலத்தின் முன்னணி தகவல் தொழில்நுட்ப மாநாடான உமாஜின்- 2026 நிகழ்வில் அறிமுகப்படுத்தி உள்ளது. "நம்ம அரசு" வாட்ஸ்-அப் சாட்பாட் சேவையின் மூலம், பொதுமக்கள் அரசு சேவைகளைத் தங்களது செல்போன் வழியாகவே எளிதாகப் பெற முடியும்.

இதன் மூலம் இணையதள வழிமுறைகள் மூலம் ஏற்படும் சிரமங்களோ அல்லது அரசு அலுவலகங்களுக்கு நேரடியாகச் செல்ல வேண்டிய அவசியமோ இனி இருக்காது. பொதுமக்கள் +9178452 52525 என்ற வாட்ஸ்-அப் எண்ணின் மூலம் இந்தச் சேவையைப் பயன்படுத்தலாம்.


அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் "நம்ம அரசு" திட்டத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மெட்டா இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அருண் ஸ்ரீநிவாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்தின் முதல் கட்டமாக உள்ளாட்சித்துறை சேவைகள், இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த பக்தர்களுக்கான சேவைகள், மின்சார வாரிய கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட 16 துறைகளைச் சேர்ந்த 51 சேவைகள் தற்போது வாட்ஸ்-அப் மூலம் வழங்கப்படுகின்றன.

மக்களின் வசதியை மேலும் மேம்படுத்தும் வகையில், "நம்ம அரசு" தளத்தில் மேலும் பல துறை சார்ந்த சேவைகளை படிப்படியாக இணைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நெல்லையில் பணம் வைத்து சூதாடிய 3 பேர் கைது



**திருநெல்வேலி, ஜன.11:** திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டை, வண்ணாரப்பேட்டை அருகில் போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துகணேஷ் மற்றும் காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அனுமதியின்றி இயங்கிய ஒரு தனியார் மன்றத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த பாண்டி மகன் செல்வம் (வயது 50), கீழநத்ததை சேர்ந்த சங்கரன் மகன் சிவசுப்பிரமணியன்(50), கொக்கிரகுளத்தை சேர்ந்த கணபதி மகன் மாரிமுத்து(33) ஆகியோரிடம் இருந்து பணம் ரூ.4,160 மற்றும் சூதாட்டத்திற்கு பயன்படுத்திய அட்டைகள் ஆகியவற்றை பறிமுதல் செய்த போலீசார் அவர்கள் 3 பேரையும் கைது செய்தனர்.

## நெல்லையில் கஞ்சா, பைக் பறிமுதல்: 2 வாலிபர்கள் கைது



**திருநெல்வேலி, ஜன.11:** திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சீவலப்பேரி சாலை மணிக்கூண்டு அருகில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகத்தின் பேரில் இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேரை போலீசார் சோதனை செய்தனர்.

அதில் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூரை சேர்ந்த பிரபாகரன் மகன் தர்மராஜ் (வயது 23) மற்றும் சஞ்சய்காந்தி மகன் பாலமுருகன்(21) என்பதும், அவர்களிடமிருந்து சுமார் 10 கிராம் கஞ்சா மற்றும் ஒரு இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, அவர்களை கைது செய்தனர்.

# வரலாறு காணாத உச்சத்தில் மல்லிகைப்பூ விலை.! கிலோ ரூ.10 ஆயிரத்துக்கு விற்பனை

**திருப்பூர், ஜன.11:** கடும் பனிப்பொழிவு மற்றும் வரத்து குறைவு காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மல்லிகைப்பூ வரத்து குறைந்துள்ளது. தற்போது மார்கழி மாதம் என்பதால் மக்கள் பலர் மாலை அணிவதாலும், சில நாட்களில் பொங்கல் திருநாள் வரவிருப்பதாலும் பூக்களின் தேவை அதிகமாகி உள்ளது. இதனால் மல்லிகைப்பூ விலை வரலாறு காணாத அளவுக்கு விலை உயர்ந்துள்ளது.



குறிப்பாக, நிலக்கோட்டை மலர் சந்தையில் ஒரு கிலோ மல்லிகைப்பூ விலை ரூ.10 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. போதிய பூக்கள் கிடைக்காததால், ஏராளமான வெளிநாட்டு ஆர்டர்கள் ரத்தானதாக வியாபாரிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ஒரு கிலோ மல்லிகைப்பூ விலை ரூ.9 ஆயிரத்துக்கும், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மலர் சந்தையில் ரூ.8 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மதுரை மாட்டுத்தாவணியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 500 ரூபாய்க்கு விற்பனையான மல்லிகைப்பூ தற்பொழுது 6000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

திருப்பூர் பூமார்க்கெட்டிற்கு, சேலம், தர்மபுரி மற்றும் திருப்பூரின் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பல்வேறு பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது பனிப் பொழிவு அதிகரித்து காணப்படுவதால் பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பூ மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைந்தே காணப்படுகிறது.

இதனால் பூக்களின் விலை கிடு, கிடுவென உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் கிலோ ரூ.3 ஆயிரம் வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது ரூ.7 ஆயிரத்திற்கும் அதிகமாக விற்பனையானது. பூ மார்க்கெட்டில் விற்கப்பட்ட பூக்களின் விலை (1 கிலோவிற்கு) பின்வருமாறு:-

ரூ.100-க்கு விற்கப்பட்ட செவ்வந்தி ரூ.120-க்கும், சம்பங்கி ரூ.60-க்கும், ரூ.800-க்கு விற்கப்பட்ட பிச்சிப்பூ ரூ.1,000-க்கும், ரூ.1400-க்கு விற்கப்பட்ட முல்லைப்பூ ரூ.1400-க்கும், அரளி பூ ரூ.160-க்கும், ரோஜா ரூ.240-க்கும், கனகாம்பரம் ரூ.800-க்கும், காக்கடா பூ ரூ.600-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மவுசு குறையாத மல்லிகையின் விலையால் இல்லத்தரசிகள் அதிர்ச்சியில் உள்ள நிலையில், இன்னும் சில நாட்களில் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட உள்ளது. இதனால் பூக்களின் விலை மேலும் உயருமோ என்ற அச்சத்தில் அனைத்து தரப்பினரும் உள்ளனர்.

# ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள்

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



**சென்னை, ஜன.11:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, பணி நிலைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து பேச்சு நடத்துவதற்கு கூட அழைப்பு விடுக்காமல் அவர்களை தி.மு.க. அரசு அலைக்கழிப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழக அரசு திட்டங்களை தொலைதூரத்தில் மக்களுக்கு கொண்டு செல்லும் சிறந்த பணியை மேற்கொண்டு வருபவர்கள் ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் தான். ஊதிய உயர்வு, பணி நிலைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் பலமுறை வலியுறுத்தியும் எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. அதனால், வேறு வழியின்றி இப்போது காத்திருப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஆண்டுதோறும் பணியை புதுப்பிக்கும் நடைமுறையை கைவிட்டு, 15 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும்; பல்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களுக்கான ஊதியத்தை ரூ.25,000 முதல் ரூ.60,000 வரை ஊதியம் நிர்ணயிக்க வேண்டும்; காப்பீடு மற்றும் வருங்கால வைப்பு நிதி வழங்க வேண்டும்; வங்கிக் கணக்குகளில் ஊதியத்தை வரவு வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்து தான் அவர்கள் போராடி வருகின்றனர்.

எந்த அங்கீகாரமும், நியாயமான ஊதியமும் இல்லாமல் பணி செய்து வரும் அவர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை ஆகும். எனவே அவர்களை மேலும், மேலும் அலைக்கழிக்காமல் அவர்களை அரசு அழைத்து பேச்சு நடத்த வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி போராட்டத்தைத் திரும்பப் பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 19-ந்தேதி தீர்வு காணாவிட்டால் அரசு டாக்டர்கள் 20-ந்தேதி போராட்டத்தில் குதிக்க முடிவு

**சென்னை, ஜன.11:** அனைத்து அரசு டாக்டர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (போக்டா) சார்பாக தொடர் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

அரசு டாக்டர்களின் நீண்ட நாள் கோரிக்கையான 354 அரசாணையை மறுவரையறை செய்ய வேண்டும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படி ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி இந்த போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து அரசு ஜனநாயக டாக்டர்கள் சங்கங்க ளின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பி பாலகிருஷ்ணன் கூறியதாவது:-

நீண்ட காலமாக நாங்கள் முன் வைத்துள்ள கோரிக்கயை அரசு இதுவரை பரிசீலிக்கவில்லை. இந்த நிலையில் மீண்டும் சுகாதாரத்துறை அமைச்சரை சந்தித்து வலியுறுத்தினோம். அவர் 19-ந்தேதி இதுகுறித்து நிதித்துறை செயலாளர் இடம் பேசி முடிவு அறிவிப்பதாக கூறியுள்ளார்.

19-ந்தேதி எங்களது கோரிக்கை பரிசீலிக்கப்படாவிட்டால் 20-ந்தேதி முதல் தொடர் போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளோம். முதல் கட்டமாக 48 மணி நேரம் உண்ணாவிரத போராட்டம் மேற்கொள்ளப்படும், பின்னர் புறநோயாளிகள் புறக்கணிப்பு போராட்டம், அதனைத் தொடர்ந்து சாகும் வரை போராட்டம், காலவரையற்ற வேலை நிறுத்தம் என பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்த செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் நலன் பாதிக்காத வகையில் அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

பொங்கலுக்குள் எங்களுக்கு தீர்வு கிடைக்குமா? என்று பார்ப்போம். ஆனால் பொங்கல் முடிந்த பிறகு உயர் அதிகாரிகளுடன்பேச்சுவார்த்தை நடத்தி முடிவை அறிவிப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அறிவிப்பு

டாஸ்மாக் கடைகளுக்கு வரும் 16, 26 மற்றும் பிப்.1ம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

வருகின்ற 16-01-2026 அன்று திருவள்ளுவர் தினம் (வெள்ளிக்கிழமை, 26-01-2026 அன்று குடியரசு தினம் (திங்கட்கிழமை மற்றும் 01-02-2026 அன்று வடலூர் வள்ளலார் நினைவு தினம் (ஞாயிற்றுக்கிழமை) மேற்படி மூன்று தினங்களில் மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் மதுபான கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் மூடப்பட்டு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி தினத்தன்று மதுவகைகள் விற்பனை பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நாட்களில் இம்மாவட்டத்தில் இயங்கும் அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்களும் மூடப்பட்டிருக்க வேண்டும் என அனைத்து கடை மேற்பார்வையாளர்கள்/ விற்பனையாளர்கள்/உதவி விற்பனையாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தவறிழைத்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை



இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் படி மதுரை மாவட்டத்திற்கான 2026 ஆம் ஆண்டுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19/12/2025 அன்று வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாகம் எண் 98 இல் 844 பேர் வரைவு பட்டியலில் வாக்காளர்களாக இடம் பெற்றுள்ளனர்.

இந்த பட்டியலில் ஆளுங்கட்சியின் தூண்டுதலால் வாக்குசாவடி நிலை அலுவலர் மூலம் திட்டமிட்டு மரணமடைந்த 29 பேர் பெயர்களும், நிரந்தரமாக இடம் பெயர்ந்த 12 பேர் பெயர்களும், ஒரு இரட்டை பதிவு என 42 பேர் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த பதிவுகளை நீக்கவும், தவறிழைத்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் மீது உரிய நடவடிக்கைஎடுக்க கேட்டும் உரிய ஆவணங்களுடன் கழக மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் Ex.MLA அவர்கள் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 இன் உதவி ஆணையாளரிடம் புகார் மனுவினை வழங்கினார்.

SIR ஐ எதிர்ப்பது போல வெளியில் காட்டிக்கொண்டாலும் அரசு அதிகாரத்தை பயன்படுத்தி இது போன்ற மோசடிகளை செய்து தேர்தலில் வெற்றி பெற திமுக அரசு முயற்சித்து வருகிறது என்றும், திமுக அரசின் மோசமான நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மகளிர் மாணவர் என பொதுமக்கள் அனைவரும் இணைந்து இந்த முறை திமுகவுக்கு பாடம் புகட்டுவது உறுதி எனவும் செய்தியாளர்களிடம் கூறினார்.

# சமத்துவப் பொங்கல் விழா





தஞ்சாவூர் மாவட்டம், பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் நேற்று (09.01.2025) காலை 9 மணியளவில் கல்லூரி மைதானத்தில் ஸ்ரீமான்.து.கிருஷ்ணசாமி வாண்டையார் கல்லூரி தாளாளர் மற்றும் செயளாலர் அவர்கள் தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா மாணவ மாணவிகள் சிறப்பாக கொண்டாடினர்.

# திருவம்பாவை ஊர்வலம்



போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்கழி 26 ஆம் நாள் திருவம்பாவை ஊர்வலம்.




# தரையில நான் ஒரு 'ஜனநாயகன்' இருக்கேன், என்ன கண்டுக்கல... சீமான் ஆதங்கம்



**சென்னை, ஜன.11:** ஹெச். வினோத் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் 'ஜன நாயகன்' நேற்று உலகம் முழுவதும் வெளியாக இருந்த நிலையில் தணிக்கை சான்று வழங்கப்படாததால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்தனர். மேலும் 'ஜன நாயகன்' படத்திற்கு தணிக்கை சான்று வழங்கப்படாததற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தணிக்கை துறையை கண்டித்து பதிவிட்டிருந்தார். இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த சீமான், "தணிக்கை துறை விருப்பு வெறுப்புக்கு ஏற்றமாதிரி செயல்படுகிறது. நான் நடித்த அடங்காதே படத்தில் நான் பேசிய வசனங்களை நீக்கி விட்டார்கள். அந்த படத்தில் 500 இடங்களுக்கு மேல் வெட்டி விட்டார்கள்.

திரையில வர்ற ஜனநாயகன் பத்தி பேசிட்டு இருக்கீங்க'.. தரையில நான் ஒரு ஜனநாயகன் இருக்கேன். என்ன கண்டுக்க மாட்றீங்க...

ஜனநாயகன் படத்திற்கு ஆதரவாக உடனே குரல் கொடுக்கும் முதலமைச்சர் ஏன் போராட்டத்தில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்டோருக்கு குரல் கொடுப்பதில்லை" என்று தெரிவித்தார்.

# அமைச்சரவையில் இடம் கேட்டு அ.தி.மு.க.வுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை - நயினார் நாகேந்திரன்



**கோவை, ஜன.11:** சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ஜ.க., 56 தொகுதிகளும், அமைச்சரவையில் பங்கும் கேட்டு அழுத்தம் கொடுப்பதாக தகவல் பரவியது. டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, அவரிடம் இவ்வாறு வலியுறுத்தியதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், கோவை வந்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:- தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பா.ஜ.க. இருக்கிறது. எடப்பாடி பழனிசாமிதான் முதல்-அமைச்சராக வருவார்.

அமைச்சரவையில் இடம் கேட்டு நாங்கள் அழுத்தம் எதுவும் கொடுக்கவில்லை. தே.மு.தி.க. கூட்டணி குறித்த முடிவை அறிவிப்பதாக கூறியிருக்கிறது. அதன்பிறகு, எங்கள் கருத்தை தெரிவிக்கிறேன்.

எங்கள் கூட்டணிக்கு முதலில் அன்புமணி ராமதாஸ் வந்திருக்கிறார். இன்னும் நாள் இருக்கிறது. தை பிறந்தால் வழி பிறக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# காங்கிரஸ் நடத்தும் 'ஜன நாயகன்' பொங்கலில் கூட்டணி பற்றி பேசினால் நடவடிக்கை - செல்வப்பெருந்தகை



**சென்னை, ஜன.11:** தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் இந்த முறை கூடுதல் தொகுதிகள் வேண்டும். ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில் கூட்டணி விவகாரங்கள் தொடர்பாக கட்சி மேலிடம், முடிவெடுக்கட்டும். பொது வெளியில் எதையும் பேச வேண்டாம் என்று ஒரு தரப்பு பேசி வருகிறது.

காங்கிரசுக்குள் இப்படி 2 பிரிவாக செயல்பட்டு வரும் நிலையில், ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 'ஜனநாயகன் பொங்கல்' என்ற பெயரில் காங்கிரசில் ஒரு பிரிவினர் இன்று மாலை கோயம்பேட்டில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு இந்த கோரிக்கையை விரும்பும் நிர்வாகிகளும், தொண்டர்களும் வர வேண்டும் என்று அழைப்பும் விடுக்கப்பட்டு உள்ளது. இது காங்கிரசுக்குள் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் தனியாக இவ்வாறு நிகழ்ச்சி நடத்துவது தொடர்பாகவும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாமா? என்பது குறித்தும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இன்று கட்சியின் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக அவர் நிருபர்களிடம் கூறும்போது, கோயம்பேட்டில் இன்று நடக்கும் நிகழ்ச்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அதில் கூட்டணி விவகாரங்கள் பற்றி பேசினால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக தொண்டர்களின் கருத்துக்கள், கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் பொதுவெளியில் பேசுவது கூட்டணிக்குத்தான் தேவையற்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி வலுவாக உள்ளது. இந்த கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக பேசுவதற்கு கிரிஸ் சோடங்கர் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவை டெல்லி மேலிடம் நியமித்துள்ளது.

இந்த குழுவினர் தி.மு.க.வுடன் தொடர்ந்து பேசி வருகிறார்கள். ஏற்கனவே சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை ஆகிய அமைப்புகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்போது சென்ஷார் போர்டையும் மத்திய அரசு கட்டுப்பாட்டில் எடுத்து உள்ளது. இதைத்தான் காங்கிரஸ் கண்டிக்கிறது.

கடலூர் மாநாட்டில் விஜயபிரபாகரன், விஜய்க்கு ஒரு ஆலோசனை சொல்வதாக சொல்லி காங்கிரஸ் பற்றி பேசியுள்ளார். காங்கிரஸ் ஒருபோதும் கொல்லை புறமாக செயல்படாது. இதைப்புரிந்து கொள்ளக்கூடியவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்றார்.

பேட்டியின் போது முன்னாள் எம்.பி. திருநாவுக்கரசர், பீட்டர் அல்போன்ஸ், துணைத் தலைவர் சொர்ணா சேதுராமன், ராம் மோகன், ரூபி மனோகரன் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சுகுமாறன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# திருச்செந்தூர் கோவில் முன்பு கடல் அரிப்பு: கவனமுடன் நீராட பக்தர்களுக்கு அறிவுறுத்தல்

**திருச்செந்தூர், ஜன.11:** முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள். கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள், கோவில் முன்புள்ள கடலில் புனித நீராடிய பிறகே முருகனை தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் கடந்த ஒரு மாத காலமாக திருச்செந்தூர் முருகன் கோவில் முன்புள்ள கடற்கரையில் கடல் அரிப்பு அதிகரித்து காணப்படுகிறது. இதனால் சுமார் 6 அடி உயரத்திற்கும் 100 அடி தூரத்துக்கும் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பக்தர்கள் கடலுக்குள் இறங்கி நீராட முடியாத நிலை உள்ளது. தற்போது கடல் அரிப்பு அதிகரித்துள்ளது.

இதனால் கடலுக்குள் இருக்கும் பாறைகள் அதிக அளவு வெளியே தெரிகிறது. அதன் அருகே நீராடுபவர்களுக்கு காயம் ஏற்படும் அபாயமும் உள்ளது.

எனவே கோவில் நிர்வாகம் சார்பில் கடற்கரை பாதுகாப்பு பணியாளர்கள் மூலம் அந்த இடத்தை தாண்டி நீராட அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் பக்தர்களின் பாதுகாப்பு நலன் கருதி கடற்கரையில் கடல் அரிப்பு ஏற்படுள்ள இடத்தில் தடுப்பு கம்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com